விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 26 ஞாயிற்றுக்கிழமை (12.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 358

ராம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கானையில் நேற்றிரவு பயங்கரம்

ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு

பூசகர்கள் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை முருகமூர்த்தி ஆலயத்திற்கு முன்பாக வைத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பூசகர்கள் மீது நேற்றிரவு 8.30 மணியளவில் ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதில் படுகாயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையில் வைத்து அவர்களது நண்பர்களால் தெரிவிக்கப்பட்டதாவது,

நேற்றிரவு 8.30 மணியளவில் சங்கானை முருகமூர்த்தி ஆலயத்திலிருந்து பூசகர் ஒருவர் வெளியேவந்துள்ளார். அப்போது அங்கு நின்ற ஆயுததாரிகள் பூசகர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கி (02ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. (சா/த) பரீட்சை நாளை ஆரம்பம்

(திருகோணமலை)

நாடளாவிய ரீதியில் கல்வி பொதுத்தராதர (சாதாரண) பரீட்சை நாளை ஆரம்பமாகின்றது. இப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் வடக்கு மாகாணத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில், கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சை நாடளாவிய ரீதியில் நாளை ஆரம்பமாகின்றது. இப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் (02ஆம் பக்கம் பார்க்க)

கூட்டமைப்பு-தமிழ்க்கட்சி அரங்கம்

அரசியல் தீர்வுக்காக ஒன்றிணைவு

நேற்றைய சந்திப்பில் இணக்கம்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான காத்திரமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் கட்சிகளின் அரங்கமும் இணைந்து செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துக்குமிடையில் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பின்போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (02ஆம் பக்கம் பார்க்க)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் கூட்டமைப்புடன் சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்று நேற்று சனிக்கிழமை காலை கொழும்பில் இடம்பெற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது சிறுபான்மையினர் தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரு கட்சிகளும் தொடர்ந்து பேச்சு நடத்துவது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பஷீர் சேகுதாவூத், எச்.எம்.எம்.ஹரீஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

பாலகுமாரை இராணுவத்தினர் அழைத்துச் சென்றதை கண்டேன்

ஐ.நாவுக்கு எழுத்துமூலம் சாட்சி

(கொழும்பு)

வன்னியில் கடந்த வருடம் இறுதிக் கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும் அரசியல் பிரமுகருமான க.வேலாயுதமாரன் மற்றும் அவரது மகனான சூரியதீபனும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சிறிலங்கா படைத்தரப்பினரால் தனியாக அழைத்துச் செல்லப்பட்டதை தான் நேரில் கண்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவுக்கு எழுத்து மூல சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த எழுத்து மூல சாட்சியம் வழங்கியவரின் பெயரை அவரின் பாதுகாப்புக் கருதி ஐ.நா. சபை வெளியிடவில்லை.

விடுதலைப் (20ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நேர்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பு- தமிழ்க்கட்சி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தின.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் மக்களின் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தச் சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டது.

இது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்க் கட்சிகளாகிய நாம் எல்லோரும் நேற்றுக் கொழும்பிலுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அலுவலகத்தில் ஒன்றுகூடி எமது மக்களின் அரசியற் பிரச்சினைக்குரிய தீர்வுபற்றிக்கலந்துரையாடினோம்.

அதற்கான தீர்வுத் திட்டங்களை தமிழ்க் கட்சிகளாகிய நாம் எந்த வகையில் முன்வைத்துப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்று கூடி ஒருமித்த கருத்தினை வெளிப்படுத்த வேண்டும் என்ற கருப்பொருளில் எமது சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தவகையில் தமிழர்களின் தற்போதைய மிக முக்கியமான பிரச்சினைகளான அரசியற் தீர்வு, மீள் குடியேற்றம், இராணுவ ஆக்கிரமிப்புக்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள், இனவாதக் கொடூரங்கள், சிங்களக் குடியேற்றம் என்பன குறித்து மிகவும் தெளிவுபட்ட கருத்தை முன்வைத்து ஆராய்ந்தோம்.

தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் தமிழ் மக்களின் எதிர்காலமான அரசியற் தீர்வுப் பிரச்சினையில் ஒன்றுபட்ட கருத்து வெளிப்பாடே எமது நோக்கமாக இருக்கும்.

இச்சந்திப்பானது மிகவும் ஆரோக்கியமான எழுச்சியையே எமக்கு வழங்கியிருந்தது.

இதேவேளை எமது கட்சியினால் முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்ட யோசனை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதேபோன்று தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தினாலும் திட்ட யோசனைகள் முன்வைக்கபட்டது. இச்சந்தர்ப்பத்தில் இரண்டு கட்சிகளிலிருந்தும் மூன்று பேர் கொண்டதாக ஒரு குழு அமைக்கப்பட்டு ஒருமித்த திட்ட ஆராய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார்.

இக்கலந்துரையாடல் குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில்,

ஊர் கூடி தேர் இழுக்க வேண்டும் என்ற பழமைக்கு இணங்க அனைத்துக் கட்சிகளும் ஒன்று கூடி ஒரு சந்திப்பினை மேற்கொண்டுள்ளோம்.

இச்சந்திப்பின் போது பொதுவான எமது எதிர்பார்ப்புக்குள்ளான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினோம். இச்சந்திப்பின் மூலம் எமது மக்களின் பிரச்சினைகளை ஒன்றுசேர ஒரு கருத்து வெளிப்பாடாக எமது அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க உள்ளோம். தற்போதைய அரசாங்கம் இலங்கையை ஒரு வல்லரசான நிலைக்கு தக்க வைத்துள்ளது.

பலமான ஒரு எதிர்க் கட்சியின்றி பெரும் பலத்துடன் அரசாங்கம் காணப்படுகின்றது. எனவே இந்நிலையில் நாம் அரசாங்கத்தை எதிர்த்து ஒருபோதும் எதையும் சாதித்து விட முடியாது.

ஆகையால் எமது ஒன்றிணைவு தமிழர்களின் முன்னடைவாக இருக்கட்டும். எமது கட்சியானது எப்போதும் ஒரே கொள்கைகளில் மாறுபாது செயற்பட்டு வருகின்றது. ஜனநாயக ரீதியாகச் செயற்பட்டாலன்றி இல்லையேல் எதையும் சாதித்து விட முடியாது என்று குறிப்பிட்டார். (ச-7)

வடமாகாணப் பட்டதாரிகளுக்கான ஆட்சேர்ப்புப்போட்டிப்பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

ஆரம்பம்-திங்கள்,காலை9.00மணி. திங்கள் - வெள்ளி வரை, 9.00 - 1.00 மணி வரை மொத்தமாக 20 மணித்தியால வகுப்புக்கள் நடைபெறும்

கட்டணம் 600 ரூபாய்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு

(யாழ்.போதனா வைத்தியசாலைஎதிராக) (1808)

க.பொ.த...

வடக்கு மாகாணத்தில் பூர்த்தியடைந்துள்ளன.

பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் உரிய நிலையங்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் நேரடியாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் 70 பரீட்சை நிலையங்களில் 13 ஆயிரத்து 813 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 7 ஆயிரத்து 246 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ச-5)

ஆயுததாரி...

சூட்டுச் சம்பவத்தினையடுத்து அருகிலிருந்த வீட்டிலிருந்த தந்தையார் ஓடிச்சென்ற போது அவரின் மீதும் பின்னர் சென்ற அவரின் மகன் மீதுமாகத் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் நித்தியானந்த சர்மா (வயது 56) அவரது மகன்களான சிவானந்த சர்மா (வயது 32), ஜெகானந்த சர்மா (வயது 26) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பெறுமதியான மோட்டார் சைக்கிளையும் துப்பாக்கிதாரர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். அவர்கள் கொண்டுவந்த இரண்டு சைக்கிள்களும் அவ்விடத்திலேயே காணப்படுகின்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இச்சம்பவத்தையடுத்து யாழ். குடாநாடு முழுவதும் இராணுவத்தினர் தீவிர சோதனை நடவடிக்கையிலீடுபட்டதுடன் சங்கானையில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுக்கு விடுதலைப் புலிகளே காரணமென இராணுவத்தினர் கூறியதாக பிரதேசத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

Nottingham College Of London And UNI ICT - Campus

கணினி நிறுவனங்கள்

AFTER A/L WHAT NEXT ???.... உங்களுக்காகவே.....

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2010

எமது யாழ் மாவட்ட மாணவர்களது கணனி, ஆங்கிலம், முகாமைத்துவம், மருத்துவம் போன்ற துறைகளின் அறிவை வளர்க்கும் நோக்குடன் கீழ்வரும் சர்வதேச கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு எமது நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. அந்த வகையில் கீழ்வரும் கற்கை நெறிகளை நீங்கள் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றின் மூலம் எமது நிறுவனத்தில் குறைந்த செலவில்கற்கமுடியும். இத்திட்டத்தின் மூலம் ஒருவர் மூன்று கற்கை நெறிகளை தெரிவு செய்து கற்க முடியும்.

Certificate Courses :-
- Certificate in Information Technology
- Certificate in PC Hardware Engineering
- Microsoft Office for Business Professional
- Certificate in PC Network Administration
- Certificate in English

Diploma Courses :-
- Diploma in Marketing
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Human Resource Management
- Diploma in Electronic Technology
- Diploma in Multimedia
- Diploma in IT
- Diploma in Hardware Engineering
- Diploma in Business (With Accounting & IT)
- Diploma in Spoken Singala Language
- Professional Diploma in Marketing
- Diploma in Spoken & Practical English & IELTS

உங்கள் நண்பர்களுக்கும் இதை தெரியப்படுத்துங்கள் !!

எமது இத் திட்டத்தில் இணைய நீங்கள் செய்ய வேண்டியவை?????

எமது இப்புலமைப்பரிசிலானது பொது அறிவு மற்றும் நுண் அறிவு பரீட்சைகளை கொண்டதாகும்.

நீங்கள் பெறும் புள்ளிகளின் ஊடாக எம்மால் உங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இன்றே கீழ்வரும் எமது முகவரிக்கு உங்களது முழுப்பெயர், வீட்டு முகவரி, நீங்கள் கற்க விரும்பும் எமது கற்கைநெறியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை தெளிவாக எழுதி கீழே தரப்பட்டுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும். அல்லது மேற்படி உங்கள் விபரங்களை உங்களது கைத்தொலைபேசியில் டைப்செய்து 078 - 911 4208 என்னும் எமது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்!!!!! இவ்வாறு அனுப்பிவைக்கும் மாணவர்களுக்கு நாம் இலவசமாக எமது விண்ணப்படிவங்கள், எமது கற்கை நெறிகள் பற்றிய விபரம் மற்றும் எமது புலமைப்பரிசில் நடைபெறும் திகதி ஆகியவற்றை தபாலில் அனுப்பிவைப்போம்.

Higher National Diploma
- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy for A/L Bio/Maths Students)

விண்ணப்ப முடிவுத் திகதி :- 23/12/2010

Degree Courses :-
- B .A (Hons) in Business Administration
- B.Sc (Hons) in Multimedia

- Conditions for Apply -

Our International Universities Affiliations:- ele Unitec University of Wales, Newport

அனுப்ப வேண்டிய முகவரி :- UNI & NOTTINGHAM COLLEGE OF LONDON ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 86

ஐ.தே.க. கூட்டத்தை தடுப்பதற்கு மேற்கொண்ட முயற்சி தோல்வி

திஸ்ஸ தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தை தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிபடைந்ததாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். கட்சி பொதுச்சபைக் கூட்டத்தை நடத்தக்கூடாது என இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. எவ்வாறெனினும் குறித்த மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய இந்த மனு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களைப் போன்று அல்லாது இவ்வாறான சவால்களை எதிர்நோக்க கட்சி ஆயத்தமாக இருந்த காரணத்தினால் இந்த வழக்கு சதித் திட்டம் தோல்வியில் முடிபடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சித் தலைமையகம் சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த மனு தொடர்பில் எவ்வித முன்னறிவித்தலும் விடுவிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் கட்சியின் பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் எனவும் நாளைமுதல் கட்சி வெற்றிப்பாதையில் செல்வதனை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது என அவர் குறிப்பட்டுள்ளார். (ச-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எம்மிடம் தரம்4 முதல்O/L வரை கற்று எமக்குப் பெருமை சேர்த்துத் தந்து க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவில் சித்தி பெற்று மருத்துவத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட எமது நிறுவன இயக்குநர் திரு.சரா புவனேஸ்வரன் அவர்களின் மகள் செல்வி பு.துவாரகா அவர்களை வாழ்த்துவதோடு இவரை வழிப்படுத்திய யாழ். சயன்ஸ் ஹோல் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

இவருடன் மருத்துவத் துறைக்கும் (5 பேர்) பொறியியல் துறைக்கும் (4 பேர்) வர்த்தகத் துறைக்கும் (6 பேர்) கலைத் துறைக்கும் (16 பேர்) தெரிவு செய்யப்பட்ட எமது ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

சயன்ஸ் அக்கடமி
நல்லூர், அரியாலை.

வாழ்த்துவோர்
ஆசிரியர்கள்

(ச-1803) "இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல் வாதம், நீரிழிவு, சூதக வலி, சிறுநீரக அழற்சி, பாலியற் குறைபாடு, வெள்ளை படுதல், அதிஇரத்த அமுக்கம், நெஞ்சுக் குத்து, நரம்புத் தளர்ச்சி, உடற் பருமன், மெலிவு, சோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை குளோகோமா, இளநரை, பொடுகு போன்ற சகல விதமான நோய்களுக்கும் பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை 17ம், 18ம், 19ம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசித் தொடர்புக்கு:-
0777047371
0757390195
0771005971

ஆனந்தா வைத்திய நிலையம்,
Dr.K.சிவானந்தன்
பொலிஸ் ஸ்ரேசன் முன்பாக,
ஸ்ரேசன் ரோட்,
சுன்னாகம். (3230)

நிழல் அல்ல; நிஜம்!!

ஒரே வாரத்திலே;

உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!

கரும்புள்ளிகள், முகப்பருக்கள், முகச்சுருக்கம், தழும்புகள் நீக்கம், உதடு கருமை நீக்கம், கருவளையம் மற்றும் கழுத்து கருமை நீக்கம், இளநரை, முடி உதிர்தலிற்கான சிகிச்சைகள், உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்

முற்றிலும் மூலிகையினாலான சிகிச்சைகள்.

"சானியா பியூட்டி பலஸ்"
132, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (கிட்டுப் பூங்கா அருகாமை)
"WE CARE ALWAYS"

முற்பதிவுகளை முற்கூட்டியே தெரிவிக்கவும்
அழையுங்கள்:-
0777351954,
0774011129 (3232)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான

திருமதி கோமதி திரிலிங்கநாதன் அவர்களின் அன்புத் தந்தையான

அமரர் கோபாலபிள்ளை இராசரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி — ஆசிரியர் குழாம்

யா/சுழிபுரம்ஜக்கியசங்க சைவ வித்தியாசாலை
சுழிபுரம்.

(C-1805)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிப்பு விழா

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வலி. தென்மேற்கு பிரதேச மாணவர்களுக்கான 13 ஆவது தொடர் ஆண்டின் நிகழ்வாக கற்க வைத்தோர், கற்பித்தோர், கற்றோர் அனைவரையும் ஒருங்கிணைந்த பங்களிப்பில் கௌரவிப்பு செய்யும் 13 ஆவது கௌரவிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.20 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் லயன் எஸ்.ஜே. செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ. கந்தசாமி, சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டத்தலைவர் (கல்வி) லயன் வி. மாணிக்கம், யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் எஸ். பிரசாந் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

உதவிப்பணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைத்திணைக்களத்தால் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம், நோயாளர்களுக்கான உதவிப் பணம் என்பவற்றை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என சமூக சேவைகள் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

பாராட்டுவிழா

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 10 ஆவது விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு வீரர்களுக்கான பாராட்டுவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள உடற்கல்வி அலகில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் கலந்து கொண்டு விளையாட்டு வீரர்களை கௌரவிப்பார்.

இதில் பல்கலைக்கழக விளையாட்டு அணிகளில் அங்கம் வகிக்கும் அனைத்து விளையாட்டு வீரர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

பொதுக்கூட்டம்

(அல்வாய்)

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி இணைவது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதி அதிபர் த.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

(அல்வாய்)

பருத்தித்துறை ஆத்தியடி சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் சைவமன்ற முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி ஆத்தியடி பிள்ளையார் கோவில் மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை பெற்றோர் சங்கத் தலைவரும் சனசமூக நிலைய உத்தியோகத்தியோகத்தருமான க.சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். உள்ளூராட்சி திணைக்கள சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி ப. யோகராசா, கிராம உத்தியோகத்தர் அ. உமாசங்கர், புலோலி மத்தி சமூர்த்தி உத்தியோகத்தர் சு.கந்தசாமி, பொறியியலாளர் சண்முகநாதன் கணேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

புனித மரியாயின் சேனையின் வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்- மறை மாவட்ட புனித மரியாயின் சேனையின் வருடாந்த விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் ஆலய பங்குத் தந்தையும் மரியாயின் சேனை ஆன்மீக இயக்குநருமான அருட் பணியாளர் றெஜி இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-72)

திருவெம்பாவை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை -தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய (கண்ணகி ஆலயம்) திருவெம்பாவை உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 5 மணிக்கு கும்பபூசையுடன் ஆரம்பமாகி 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

தினமும் திருவாதவூரடிகள் புராணப் படிப்பு இடம்பெறுவதுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 4 மணிக்கு நடேசரபிஷேகம் நடைபெற்று ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஸ்ரீ

இராசி பலன்

12.12.2010
(கார்த்திகை 26 ,ஞாயிற்றுக்கிழமை)
சப்தமி முழுவதும்
சதயம் பின்னிரவு 5.03 மணி வரை
இராகுகாலம் 4.50-6.20 மணிவரை
சுபநேரம் 9.20-10.50 மணிவரை

மேடம் வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், எடுத்த கருமங்கள் கைகூடும், விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

இடபம் தொழில் முன்னேற்றம் கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள், உடல் நலம் உற்சாகமாகக் காணப்படும், பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

மிதுனம் மங்கையரால் ஏற்பட்ட மனக்குழப்பம் அகலும், விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், பிரயாண நன்மையுண்டு.

கடகம் எதிர்பாராத வகையில் சில பிரச்சினைகள் ஏற்படலாம், உடல் நலத்தில் கூடிய கவனம் தேவை, பிரயாணத்தில் விழிப்புடன் செயற்படுவது நல்லது.

சிங்கம் பயணத்தால் அலைச்சல் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் ஏற்படலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், மதிப்பும், மரியாதையும் உயரும்.

கன்னி தேகநலன் புத்துணர்வு பெறும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த காரியங்கள் கைகூடும், பணவரவு திருப்தி தரும், சுப செய்திகள் வந்து சேரும்.

துலாம் பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள்.

விருச்சிகம் பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் அதிகரிக்கும், விலையுயர்ந்த பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

தனுசு உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் மனம் மகிழ்வீர்கள், வியாபார விருத்தி உண்டு, சுவாரஸ்யமான நாள், பொருட்சேர்க்கையேற்படலாம்.

மகரம் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர், உத்தியோக உயர்வுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பண வரவு திருப்தி தரும்.

கும்பம் இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், சில வேலைகளை முடிப்பதற்கு பல மணி நேரம் செலவு செய்வீர்கள்.

மீனம் ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாலை நேரம் மகிழ்ச்சிகரமான பயணமொன்றை மேற்கொள்வீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

வாரம் ஒரு தகவல்

கீரியும் பாம்பும்

"என்ன கூட்டம் இங்கே?"

"பாம்புக்கும் கீரிக்கும் சண்டை சேர்"

"பலே, நன்றாகத்தான் இருக்கும்"

"நல்ல பாம்பைப் பார்த்து நாம்தான் பயப்படுகிறோம். ஆனால் கீரிப்பிள்ளையிடம் அதன் ஜம்பம் பலிக்காது."

"என்ன அப்படிச் சொல்றீங்க?"

"நல்ல பாம்பின் விஷம் கீரிப்பிள்ளையை ஒன்றும் செய்யாதே"

"அப்படித்தான் எல்லோரும் நினைக்கிறார்கள். அது தவறு"

"அப்படியா?"

"ஆமாம். பாம்பின் விஷம் நமக்கு எப்படியோ அப்படித்தான் கீரிப்பிள்ளைக்கும்"

"அப்படியிருக்கும் போது கீரியைப் பார்த்து பாம்பு ஏன் பயப்படுகிறது?"

"அதற்குக் காரணம் வேறு. மிகவும் வேகமாக செயற்பட்டு பாம்பைத் தாக்கி அதனிடமிருந்து கடிபடாமல் தப்பிக் கொள்ளும் சாமர்த்தியம் கீரிப்பிள்ளையிடம் உண்டு. அதுதான் விடயம்"

"சரி... இவ்வளவு சாமர்த்தியமாக விபரமெல்லாம் சொல்றீங்களே... நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்வீர்களா?"

"ஹி... உங்களுடைய கேள்விக்கெல்லாம் பதில் சொல்வதற்கு அதிக புத்திசாலித்தனம் தேவையில்லை சேர்... கேளுங்க"

"பாம்புக்குக் கால் உண்டா? இல்லையா?"

"இது என்ன சேர் கேள்வி. பார்த்தால் தெரியவில்லையா? அதற்கு ஏது கால்?"

"பாம்புக்குக் கால் உண்டு என்கிறேன் நான்"

"எப்படி?"

"பாம்புக்குக் கால் இல்லையென்றால் அது 'பம்பு' என்று ஆகிவிடுமே"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	யாழ்ப்பாணம்	சாவகச்சேரி
1 Kg	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	200	130
உருளைக்கிழங்கு	70	70
பச்சைமிளகாய்	140	120
தக்காளி	140	100
மரவள்ளிக்கிழங்கு	50	60
கோவா	80	70
கரட்	100	80
பூசணி	40	40
புடோல்	100	40
வாழைக்காய்	50	40
சின்ன வெங்காயம்	150	140
பெரிய வெங்காயம்	150	100
பாகற்காய்	200	150
வெண்டிக்காய்	120	40
கரணைக்கிழங்கு	80	50
பயிற்றங்காய்	240	160
லீக்ஸ்	170	100
பீற்றூட்	100	70
கறிமிளகாய்	240	160
முருங்கைக்காய்	--	240
போஞ்சி	140	--
கத்தரி தம்புள்ள	180	60
கீரை - 1 பிடி	40	25
தேசிக்காய்	100	100
தேங்காய் (ஒன்று)	50	50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவிப்பு விழா

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வலி. தென்மேற்கு பிரதேச மாணவர்களுக்கான 13 ஆவது தொடர் ஆண்டின் நிகழ்வாக கற்க வைத்தோர் , கற்பித்தோர் , கற்றோர் அனைவரையும் ஒருங்கிணைந்த பங்களிப்பில் கௌரவிப்பு செய்யும் 13 ஆவது கௌரவிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.20 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் லயன் எஸ்.ஜே. செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்புகள் பீடபீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ. கந்தசாமி, சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டத்தலைவர் (கல்வி) லயன் வி. மாணிக்கம் , யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் எஸ். பிரசாந் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

உதவிப்பணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைத்திணைக்களத்தால் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் , நோயாளர்களுக்கான உதவிப் பணம் என்பவற்றை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என சமூக சேவைகள் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

பாராட்டுவிழா

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 10 ஆவது விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு வீரர்களுக்கான பாராட்டுவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள உடற்கல்வி அலகில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் கலந்து கொண்டு விளையாட்டு வீரர்களை கௌரவிப்பார்.

இதில் பல்கலைக்கழக விளையாட்டு அணிகளில் அங்கம் வகிக்கும் அனைத்து விளையாட்டு வீரர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

பொதுக்கூட்டம்

(அல்வாய்)

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி இணைவது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதி அதிபர் த.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

(அல்வாய்)

பருத்தித்துறை ஆத்தியடி சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் சைவமன்ற முள்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி ஆத்தியடி பிள்ளையார் கோவில் மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை பெற்றோர் சங்கத் தலைவரும் சனசமூக நிலைய உத்தியோகத்தியோகத்தருமான க.சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். உள்ளூராட்சி திணைக்கள சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி ப. யோகராசா , கிராம உத்தியோகத்தர் அ. உமாசங்கர், புலோலி மத்தி சமூர்த்தி உத்தியோகத்தர் சு.கந்தசாமி, பொறியியலாளர் சண்முகநாதன் கணேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

புனித மரியாயின் சேனையின் வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்- மறை மாவட்ட புனித மரியாயின் சேனையின் வருடாந்த விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் ஆலய பங்குத் தந்தையும் மரியாயின் சேனை ஆன்மீக இயக்குநருமான அருட் பணியாளர் றெஜி இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-72)

திருவெம்பாவை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை -தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய (கண்ணகி ஆலயம்) திருவெம்பாவை உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 5 மணிக்கு கும்பபூசையுடன் ஆரம்பமாகி 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

தினமும் திருவாதவூரடிகள் புராணப் படிப்பு இடம்பெறுவதுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 4 மணிக்கு நடேசரபிஷேகம் நடைபெற்று ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஸ்ரீ)

இராசி பலன்

12.12.2010
(கார்த்திகை 26 ,ஞாயிற்றுக்கிழமை)
சப்தமி முழுவதும்
சதயம் பின்னிரவு 5.03 மணி வரை
இராகுகாலம் 4.50-6.20 மணிவரை
சுபநேரம் 9.20-10.50 மணிவரை

மேடம் வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், எடுத்த கருமங்கள் கைகூடும், விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

இடபம் தொழில் முன்னேற்றம் கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள், உடல் நலம் உற்சாகமாகக் காணப்படும், பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

மிதுனம் மங்கையரால் ஏற்பட்ட மனக்குழப்பம் அகலும், விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், பிரயாண நன்மையுண்டு.

கடகம் எதிர்பாராத வகையில் சில பிரச்சினைகள் ஏற்படலாம், உடல் நலத்தில் கூடிய கவனம் தேவை, பிரயாணத்தில் விழிப்புடன் செயற்படுவது நல்லது.

சிங்கம் பயணத்தால் அலைச்சல் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் ஏற்படலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், மதிப்பும், மரியாதையும் உயரும்.

கன்னி தேகநலன் புத்துணர்வு பெறும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த காரியங்கள் கைகூடும், பணவரவு திருப்தி தரும், சுப செய்திகள் வந்து சேரும்.

துலாம் பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள்.

விருச்சிகம் பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் அதிகரிக்கும், விலையுயர்ந்த பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

தனுசு உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் மனம் மகிழ்வீர்கள், வியாபார விருத்தி உண்டு, சுவாரஸ்யமான நாள், பொருட்சேர்க்கையேற்படலாம்.

மகரம் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர், உத்தியோக உயர்வுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பண வரவு திருப்தி தரும்.

கும்பம் இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், சில வேலைகளை முடிப்பதற்கு பல மணி நேரம் செலவு செய்வீர்கள்.

மீனம் ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாலை நேரம் மகிழ்ச்சிகரமான பயணமொன்றை மேற்கொள்வீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

வாரம் ஒரு தகவல்

கீரியும் பாம்பும்

"என்ன கூட்டம் இங்கே?"

"பாம்புக்கும் கீரிக்கும் சண்டை சேர்"

"பலே, நன்றாகத்தான் இருக்கும்"

"நல்ல பாம்பைப் பார்த்து நாம்தான் பயப்படுகிறோம். ஆனால் கீரிப்பிள்ளையிடம் அதன் ஜம்பம் பலிக்காது."

"என்ன அப்படிச் சொல்றீங்க?"

"நல்ல பாம்பின் விஷம் கீரிப்பிள்ளையை ஒன்றும் செய்யாதே"

"அப்படித்தான் எல்லோரும் நினைக்கிறார்கள். அது தவறு"

"அப்படியா?"

"ஆமாம். பாம்பின் விஷம் நமக்கு எப்படியோ அப்படித்தான் கீரிப்பிள்ளைக்கும்"

"அப்படியிருக்கும் போது கீரியைப் பார்த்து பாம்பு ஏன் பயப்படுகிறது?"

"அதற்குக் காரணம் வேறு. மிகவும் வேகமாக செயற்பட்டு பாம்பைத் தாக்கி அதனிடமிருந்து கடிபடாமல் தப்பிக் கொள்ளும் சாமர்த்தியம் கீரிப்பிள்ளையிடம் உண்டு. அதுதான் விடயம்"

"சரி... இவ்வளவு சாமர்த்தியமாக விபரமெல்லாம் சொல்றீங்களே... நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்வீர்களா?"

"ஹி... உங்களுடைய கேள்விக்கெல்லாம் பதில் சொல்வதற்கு அதிக புத்திசாலித்தனம் தேவையில்லை சேர்... கேளுங்க"

"பாம்புக்குக் கால் உண்டா? இல்லையா?"

"இது என்ன சேர் கேள்வி. பார்த்தால் தெரியவில்லையா? அதற்கு ஏது கால்?"

"பாம்புக்குக் கால் உண்டு என்கிறேன் நான்"

"எப்படி?"

"பாம்புக்குக் கால் இல்லையென்றால் அது 'பம்பு' என்று ஆகிவிடுமே"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	யாழ்ப்பாணம்	சாவகச்சேரி
1 Kg	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	200	130
உருளைக்கிழங்கு	70	70
பச்சைமிளகாய்	140	120
தக்காளி	140	100
மரவள்ளிக்கிழங்கு	50	60
கோவா	80	70
கரட்	100	80
பூசணி	40	40
புடோல்	100	40
வாழைக்காய்	50	40
சின்ன வெங்காயம்	150	140
பெரிய வெங்காயம்	150	100
பாகற்காய்	200	150
வெண்டிக்காய்	120	40
கரணைக்கிழங்கு	80	50
பயிற்றங்காய்	240	160
லீக்ஸ்	170	100
பீற்றூட்	100	70
கறிமிளகாய்	240	160
முருங்கைக்காய்	--	240
போஞ்சி	140	--
கத்தரி தம்புள்ள	180	60
கீரை - 1 பிடி	40	25
தேசிக்காய்	100	100
தேங்காய் (ஒன்று)	50	50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த இச்சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், யாழ்.மாவட்ட சி.க.வ.கூ.சங்க சமாசத்தலைவர் செ.இலகுநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும், கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

பாம்புக்கடிக்கு இலக்கான யுவதி வைத்தியசாலையில் அனுமதி

(கிளிநொச்சி)

கிளி- உருத்திரபுரம் பகுதியில் யுவதி ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

உருத்திரபுரம் சிவன் சோலை-சிவநகர் எனும் முகவரியைச் சேர்ந்த இ.சாந்தினி தேவி (வயது21) என்பவரே நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பாம்புக்கடிக்கு இலக்கானவர் ஆவார்.

இவர் உருத்திரபுரம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-4-30)

ஜனாதிபதியின் விவகாரத்தால் அமைச்சர்களும் பிரிட்டன் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.வருத்தம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விவகாரத்தால் எதிர்காலத்தில் அமைச்சர்கள், வியாபாரிகளும் பிரிட்டனுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐ.தே.க. எம்.பி.யான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் வியாபாரிகள் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டால் வியா பாரம் சீரழிந்துவிடும் என்பதுடன் பிரச்சினைக் கான பக்கம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிநாள் விவாத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தம் நிறைவடைந்த தன் பின்னரும் முதலீட்டாளர்கள் வருகை தரவில்லை. முத லீட்டாளர்களின் வருகை 20 வீதத்தில் குறைந் துள்ளது.

சர்வதேச பிரஜைகள் எமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு எதிர் பார் த்து இருக்கின்றனர். அவற்றை நாமே இனங் காண வேண்டும் எமக்கு தெரியாத பக்கத்தை பார்த்துகொண்டால் யுத்தத்திற்கு பின்னர் முத லீடுகள் ஏன் அதிகரிக்கவில்லை? என்பதற்கு பதிலளிக்க முடியும்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டில் பல விடயங்களை எதிர்பார்த்தோம்.

அரசாங்கம் ஜனநாயகத்தை நிறுவி ஊடக சுதந்திரத்தை பாதுகாத்து 17 ஆவது திருத் தத்தை முழுமையாக அமுல்படுத்தும் என்று எதிர்பார்த்தோம். எனினும் பழைய பாதையிலே அரசாங்கம் செல்கின்றது. வெளிநாடுகளும் இவை தொடர்பில் கவனம் செலுத்துகின்றன.

நீதிமன்றம் சுயாதீனமாக இருக்க வேண்டும். இல்லையேல் முதலீட்டாளர்களை எதிர் பார்க்க முடியாது ஐரோப்பிய நாடுகள் 65வீத மான பொருட்களை இறக்குமதி செய்கின்றனர். பிரச்சினை ஏற்பட்டால் இருப்பதையும் இழந்து விடுவோம்.

பிரித்தானியாவிற்கு சென்ற ஜனாதிபதிக்கு பிரித்தானிய பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருக்கலாம். எதிர்காலத்தில் அமைச்சர்கள், வியாபாரிகளும் செல்ல முடியாத நிலைமை ஏற்படும். அரசாங்கத்துக்கு தெரியாதது எங்களுக்கு தெரிகிறது. அதுவே வெளிநாடுகளுக்கும் தெரிகிறது.

இலங்கையுடன் பிரச்சினை இருந்தமையால் தான் பிரித்தானியா பாதுகாப்பு வழங்கவில்லை. என்பதுடன் அரசுக்கு தெரியாத பக்கத்தை அரசாங்கம் கண்டுபிடித்து அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். (ஸ்ரீ-2)

நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளி.மாவட்டச் செயலகத்தில் இயங்கும் இறப்பு, பிறப்பு மாவட்ட பதிவுச் செயலகத்தால் நடமாடும் சேவை ஒன்று இன்று காலை 9 மணிக்கு உதயநகர் கிழக்கு கிராம அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தபுரம் கிளிநொச்சி நகரம், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு ஆகிய கிராம மக்களின் நலன் கருதி கியூடெக் கரித்தாஸ் நிறுவன அனுசரணையுடன் இந்நடமாடும் சேவை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-30)

களுவாஞ்சிக்குடி நீதிமன்றை 26 வருடங்களின் பின் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

களுவாஞ்சிக்குடியில் இயங்கிய நீதிவான் நீதிமன்றத்தை 26 வருடங்களின் பின்னர் மீண்டும் இயங்கச் செய்ய நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை கடந்த 9ஆம் திகதி நீதியமைச்சில் சந்தித்தார்.

இச்சந்திப்பில் களுவாஞ்சிக்குடியில் கடந்த 26 வருடங்களுக்கு முன்னர் இயங்கிய நீதிவான் நீதிமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்வது தொடர்பாக அவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட இந்த நீதிமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்யும் வகையில் முதற்கட்டமாக வாரம் ஒருமுறை இயங்கும் வகையில் சுற்றுலா நீதிமன்றத்தை ஸ்தாபிக்க நீதியமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக தனியார் கட்டடம் ஒன்றில் சுற்றுலா நீதிமன்றத்தை ஆரம்பிப்பதற்கும் அடுத்த வருட நடுப்பகுதியில் நிரந்தர நீதிமன்றத்தை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றம் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வந்த நிலையில் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக நீதிமன்றத்தின் செயற்பாடு 1984ஆம் ஆண்டு முதல் இடை நிறுத்தப்பட்டது.

இந்த நீதிமன்ற கட்டடத்தில் தற்போது விசேட அதிரடிப்படை முகாம் அமைந்துள்ளது. களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம் இயங்காததனால் கடந்த 26 வருடங்களாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவு, வெல்லா வெளி பொலிஸ் பிரிவு மக்கள் வழக்கு விசாரணைகளுக்காக மிக நீண்ட தொலைவில் உள்ள மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கே செல்ல வேண்டி இருந்தது. (ஸ்ரீ-2)

இதயத்துக்கு இதமானது கஞ்சி மருத்துவ ஆய்வில் தகவல்

(லண்டன்)

அன்றாடம் கஞ்சிகுடிப்பது இதயத்துக்கு நல்லது என்பது மருத்துவ ரீதியில் நடத்தப்பட்ட ஓர் ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. டாக்டர் பிரங்தைஸ் என்பவர் தலைமை யில் 40முதல் 65 வயதுக்குட்பட்ட 260 பேரிடம் அபர்தீன் பல்கலைக்கழகம் 3 மாதங்களுக்கு இந்த ஆய்வை நடத்தியது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைவருக்கும் வழக்கமான உணவு கொடுக்கப்பட்டது. அதில் 3 இல் 1 மடங்கு மட்டும் ரொட்டி மட்டுமோ அல்லது கோதுமை கஞ்சி மற்றும் கோதுமை- ஓட்ஸ் கஞ்சி கொடுக்கப்பட்டது. இதில் வழக்கமான உணவுடன் கஞ்சி குடித்தவர்களுக்கு மட்டும் இரத்த அழுத்தம் கணிசமாகக் குறைந்திருந்தது கண்டறியப்பட்டது என டெய்லி எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அன்றாட உணவில் சிறிதளவு கோதுமை கஞ்சி அல்லது ஓட்ஸ் கஞ்சி குடித்தால் அது பெரிய அளவில் இதயத்திற்கு நன்மை செய்கிறது. மாரடைப்போ அல்லது பக்கவாதமோ வரும் அபாயத்தை இது தடுக்கிறது என அமெரிக்க கிளினி கல் நியூட்ரீசன் என்ற சஞ்சிகையிலும் குறிப்பிடப்படுள்ளது. (ஸ்ரீ

ஜயலத் ஜயவர்த்தனா புலிகளுக்கு உதவினாரா என்பது குறித்து ஆராய தெரிவுக்குழு நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறி விடுதலைப்புலிகள் அமைப்புக்கு உதவிகளை வழங்கினாரா என்பதை கண்டறிவதற்காக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்ற தெரிவுக் குழு வொன்றை நியமித்துள்ளார்.

சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா இந்த தெரிவுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜயலத் ஜயவர்த்தன அரசியல் அமைப்பின் 6ஆவது பிரிவை மீறி செயற்பட்டுள்ளாரா என்பதை கண்டறிய தெரிவுக் குழு வொன்றை நியமிக்குமாறு ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் சபாநாயகரிடம் யோசனை முன்வைத்திருந்தனர்.

இந்த யோசனைகளில் கையெழுத்திட்டிருந்த ஆளும் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் லண்டன் சென்றிருந்த போது ஹீத்ரு விமான நிலையத்தில் நடைபெற்ற அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன ஒத்துழைப்புகளை வழங்கியிருந்ததாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்த நிலையில் ஜயலத் ஜயவர்த்தனவிற்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழு குறித்து நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்றம் மீண்டும் கூடும் போது இதற்கான அனுமதி பெறப்படும் எனவும் அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண புற்றுநோய் எய்ட்ஸ் நோய்த்தடுப்பு சங்கத்தால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் மருந்து வகைகள் வழங்கும் நிகழ்வு நேற்று றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண புற்றுநோய் எய்ட்ஸ் நோய்த் தடுப்பு சங்க உபதலைவர் த.கனகசபை, தனாதிகாரி க.நடராசா ஆகியோர் உரையாற்றுவதையும், நோயாளர்களுக்கான பொதிகளை திருமதி அ.தெய்வேந்திரம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு திருமலையில் 485 முறைப்பாடுகள்

திருகோணமலையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நடத்திய விசாரணைகளின் போது 485 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 117 முறைப்பாடுகள் கடத்தல்கள் தொடர்பானவை எனவும், 186 முறைப்பாடுகள் காணாமல் போதல்கள் தொடர்பானவை என்றும், 124 முறைப்பாடுகள் தடுத்து வைத்தல் தொடர்பானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குச்சவெளியில் நடைபெற்ற விசாரணைகளின் போது ஒரேயொரு நபர் கமராவின் முன்னிலையில் சாட்சியமளித்துள்ளார். கடுமையான மழை காரணமாக, சம்பூரில் நடத்தப்படவிருந்த அமர்வுகள் இரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கிழக்கில் சாட்சியங்களை திரட்டி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ரூ-2)

சர்வதேச ரீதியில் புலிகளுக்கு உயிரூட்டும் முயற்சிகள்

சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு உயிரூட்டும் முயற்சிகள் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் தேசிய பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என முன்னாள் சிரேஷ்ட கடற்படை அதிகாரியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் ரம்சே கிளார்க் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை தூக்கி நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக சாட்சியங்கள் இருப்பதாகவும் புலிகளின் சர்வதேச நடைமுறைகள் இலங்கைக்குள் ஏற்படுவதை தடுக்க பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு தேசப்பற்றுள்ள மக்கள் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என வும் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (ரூ-2)

ஆனமடுவவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(கொழும்பு)

ஆனமடுவ, சங்கட்டிக்குளம் சந்தியில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சங்கட்டிக்குளத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான ஸ்டேன்லி சில்வா வயது (44) எனும் வர்த்தகரே கொல்லப்பட்டுள்ளதாக அடையாளங் காணப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்த குறித்த நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரூ-2)

சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் வன்னி மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்

இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தரா தர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் வடக்கு மாணவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக இலங்கை ஆசிரியர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

பரீட்சை எழுதுவதற்குத் தேவையான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தேசியப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றும் மாணவர்களுக்கு சரியான முறையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

திருமுருகண்டி வித்தியாலயம், வன்னி உயிலம்குளம் வித்தியாலயம், மாங்குளம் வித்தியாலயம்,பெரியபுளியங்குளம் வித்தியாலயம் மற்றும் ஒலுமடு வித்தியாலயம், ஆகியவற்றில் பரீட்சைகளை நடத்தக்கூடிய சாத்தியம் கிடையாது என இலங்கை ஆசிரியர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடசாலைகளில் பரீட்சைகளை நடத்துவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோசமான காலநிலையினாலும் மரணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். மாற்று இடங்களில் பரீட்சைகளை நடத்துவதென அரசாங்கம் தெரிவித்தபோதிலும், இதுவரையில் மாற்று இடங்கள் அறிவிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி மாணவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ரூ-2)

ரிசானா தொடர்பில் அமைச்சர் டிலான் வெளியிட்டுள்ள கருத்து தவறானது

ஆசிய மனித உரிமைப் பேரவை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கைப் பணிப்பெண் ரிசானா தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா வெளியிட்டுள்ள கருத்து பிழையானது என ஆசிய மனித உரிமைப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்கிற்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு சவுதி மன்னருக்கு பூரண அதிகாரம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் ஏனைய நாட்டுத் தலைவர்களைப் போன்றே குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் சவுதி மன்னருக்குக் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் ஏனைய நாட்டுத் தலைவர்களை விடவும் சவுதி மன்னருக்கு கூடுதல் அதிகாரங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இரண்டு வழிகளில் ரிசானாவிற்கு மன்னிப்பு வழங்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட சிசுவின் பெற்றோர் மன்னிப்பு வழங்குதல் அல்லது சவுதி அரேபிய மன்னர் மன்னிப்பு வழங்குதல் ஆகிய இரண்டு வழிகளில் ஒன்றைப் பயன்படுத்தி மன்னிப்பு வழங்கப்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட சிசுவின் பெற்றோருடன் பேச்சுவார்த்தை நடத்தி ரிசானாவை விடுதலை செய்ய அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் இதுவரையில் அதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஆசிய மனித உரிமைப் பேரவை அறிவித்துள்ளது.

இதேவேளை ரிசானாவின் நிலைமை குறித்து அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை எனவும் ஊடகங்களின் மூலம் தாம் தகவல்களை அறிந்து கொண்டதாக ரிசானாவின் பெற்றோர் அறிவித்துள்ளனர். (ரூ-2)

ஒக்ஸ்போர்ட் பல்கலையில் இருதய தசைக்கலன் ஆராய்ச்சியில் ஈடுபடும் இலங்கை மாணவன்

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் கல்வி கற்று வரும் ஈழத்தில் பிறந்த பிரதீபன் புவனகுமார் தற்போது இருதயத் தசைக்கலன் தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றார்.

ஈழத்தில் பிறந்து நியூசிலாந்திற்கு இடம் பெயர்ந்து பின்னர் அவுஸ்திரேலியா மெல்பேர்ன் சர்வகலாசலைக்குத் தெரிவாகி அங்கு பொதுமருத்துவத்திலும், பொது சத்திரசிகிச்சையிலும் எம்.பி.பி.எஸ்.பட்டப் படிப்பினை இவர் பயின்றார். இதனையடுத்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மருத்துறையில் உயர் கல்வி கற்றுவரும் இவர் இந்த ஆராய்ச்சியில் தற்போது ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

பிரதீபன் ஆரம்பக் கல்வியை கொழும்பு சென்.பீற்றர் கல்லூரியிலும், அதன் பின் கொழும்பு தோமஸ் கல்லூரியிலும் கற்றார். பாடசாலைக் கல்வியில் மட்டுமன்றி இணைக் கல்வி பாடவிதான செயற்பாட்டிலும் விளையாட்டிலும், தனது திறமைகளை இவர் வெளிக்கொண்டு வந்திருந்தார்.

பெற்றோர் நியூஸிலாந்துக்குச் சென்ற போது அவர்களுடன் சென்று ஒக்லாந்து பல்கலைக்கழகத்தில் அவர் தனது எதிர்காலத்திற்கே வித்திட்டார். ஒக்லாந்தில் கிறம்மர் பாடசாலையில் ஆரம்பித்த அவரது கல்வி தற்போது புகழின் உச்சிக்கு அவரை இட்டுச்சென்றுள்ளது. இங்கு அவர் பல்துறையிலும் சிறந்து விளங்கினார்.இதன்பின்னர் மேல் படிப்புக்காக அவுஸ்திரேலியா சென்ற பிரதீபன் மெல்பேர்ன் சர்வகலாசாலைக்குத் தெரிவாகி அங்கு பொது மருத்துவத்திலும், பொது சத்திரசிகிச்சையிலும், பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் விக்டோரியன் சான்றிதழையும் இவர் பெற்றார்.

இதனையடுத்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பயின்றுவரும் அவர் தற்போது இருதய தசைக்கலன் ஆராய்ச்சியினை மேற்கொண்டு வருகிறார்.இது அவர் பிறந்த நாட்டுக்கு கிடைக்கும் பெருமையாகும் என்பதில் ஐயமில்லை. (ரூ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கலாசாலை அதிபர் வே.கணபதிப்பிள்ளை தலைமை உரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும் பாஞ்சாலி சபதம் தென்மோடி நாட்டுக்கூத்து நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

மழை காரணமாக வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 560 குடும்பங்கள் பாதிப்பு

பிரதேச செயலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மொத்தமாக 560 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 98 பேர் பாதிக்கப்பட் டனர். இதில் 3 வீடுகள் முழுமையாகவும் 36 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. முகாமில் இருந்த 129 குடும்பங்களைச் சேர்ந்த 421 பேருக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டதாக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் எஸ்.பிரேமினி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இருபாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும்; இருபாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேரும் கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 197 பேரும் உரும்பிராய் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் உரும்பிராய் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேரும் நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும் ஆவரங்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 591 பேரும் ஆவரங்கால் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 160 பேரும் புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 354 பேரும் அச்சுவேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 163 குடும்பங்களைச் சேர்ந்த 590 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், சமூக சேவை உத்தியோகத்தர், குறித்த கிராம சேவையாளர், சமுத்தி உத்தியோகத்தர் ஆகியோர் சேர்ந்து பார்வையிட்டு மக்களின் தேவையை இனம் கண்டு அதனை அரசாங்க அதிபருக்கு அறிக்கையாக சமர்ப்பித்துள்ள தாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

புலம்பெயர் தமிழர்கள் என்ற சொற்பதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்கின்றமைக்கு நோர்வேயைத் தளமாக கொண்டு இயங்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் நெடியவனிடம் இருந்து விசா பெற வேண்டிய நாள் வரலாம் என்று மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க எதிர்வுகூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் தமிழர்கள் என்ற சொல்லை என்னால் ஏற்க முடியாது.ஏனெனில் இவர்களுக்கு இலங்கை என்கிற சொந்த நாடு உண்டு. பொருளாதார நோக்கங்களுக்காக தான் வெளிநாடுகளுக்கு சென்று குடியேறியுள்ளனர். வெளிநாடுகளில் ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டு இலங்கைக்குள் தனி நாடு ஒன்றை கோரி நிற்கின்றார்கள்.

பிரித்தானியா, அமெரிக்கா, நோர்வே மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் தேர்தல் காலங்களில் புலம்பெயர் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தங்கி இருக்கின்றன.

புலி ஆதரவு சக்திகளின் நிதி தேர்தல் பிரசாரங்களின் போது இந்நாடுகளின் அரசுகளுக்கு தேவையாக உள்ளது. ஆகவே இவ் வரசுகள் புலிகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றன.

பிரித்தானியாவில் தற்போது கருத்துச் சுதந்திரம் இல்லை. அமெரிக்காவின் இரகசிய ஆவணங்களை வெளியிட்டு வரும் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகரை பிரித்தானியா கைது செய்துள்ளது.

இக் கைதை பிரித்தானியா மேற்கொள்வதற்கு பதிலாக ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளில் அமெரிக்காவால் மேற் கொள்ளப்பட்டன என்று கூறப்படும் யுத்தக் குற்றச் சாட்டுக்கள் குறித்து நீதி விசாரணை நடத்தி இருக்க வேண்டும். மேலைத்தேச நாடுகளின் தவறுகளை வெளிப்படுத்து வோர் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதை விக்கிலீக்ஸின் ஸ்தாபகர் கைது செய்யப்பட்டிருக்கின்றமை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

அமெரிக்கா தடை செய்யப்பட்ட வெடி குண்டுகளை ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகள் மீது வீசி 6 இலட்சத்து 50ஆயிரம் பொதுமக்கள் வரையானோரை படுகொலை செய்து உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

க.பொ.த. உயர் தரப்பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

யா|விக்டோரியாக்கல்லூரி

உயிரியல் பிரிவு

சி.தாரணி 2பி,சி, அ.அன்ரன் தனேஸ் 2பி,சி,எஸ்.தாரணி 2பி, சி.

கணிதப் பிரிவு

கே.லக்சனா 2சி,எஸ்.

கலைப் பிரிவு

கே.தர்மசுகி 3ஏ (மாவட்ட நிலை17),கே.கனிமொழி 2ஏ, பி(மாவட்டநிலை49), மு.ஜெயப்பிரசாத், 2ஏ,சி, ஜ.சயந்தா ஏ,2பி, கே.மயூரதி ஏ,பி,சி, ச.டிலோஜினி ஏ,பி,சி, த.பாதுஜா ஏ,பி,சி, ப.சிவச்சந்திரன் ஏ,பி,சி, ஜி.ரஜிதா ஏ,2சி, த.பவிதா ஏ,2சி, இ.பராசக்தி ஏ,2சி,ச.தர்சன்ஏ,2சி, ச.ஜெனிஸ்ரா ஏ,2சி, தி.கிருத்திகா ஏ,பி,எஸ்.

வணிகப்பிரிவு

ந.மேரிசெலஸ்ரினா 2ஏ,பி(மாவட்ட நிலை 62), இ.மாலதி 2ஏ,பி(மாவட்ட நிலை81), கயல்விழி ஏ,பி,சி. (ஸ்ரீ-3)

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் 90 வீதமானோர் உயர்தரத்தில் அமோக சித்தி

(கொழும்பு)

இம்முறை நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய புனர்வாழ்வளிக்கப் பட்டுக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் அமோக சித்தி பெற்றுள்ளதாக பரீட்சைப் பெறுபேறுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 360 பேரில் 210 பேர் மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றுள்ளனர். அவர்களில் 60 பேர் வரையானோர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் தகுதியைக் கொண்டுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்களில் இருவர் மருத்துவ பீடத்துக்கு தெரிவாகும் தகுதியைக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 31 பேர் மட்டுமே மூன்று பாடங்களிலும் சித்தி பெறத் தவறியிருக்கின்றார்கள்.

உயர்தரப் பரீட்சைக்கென குறுகிய காலத்துக்குள் தயார்ப்படுத்தப்பட்டமையும் அதற்கான காரணமாக இருக்கலாம் என்று கருதப்பட முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்கு வாடகைக்கு வீடு தேவை

இலங்கை மின்சார சபை யாழ்.புறநகர் மின் பாவனையாளர் சேவை நிலையம் இயங்குவதற்கு கோண்டாவில் CTB டிப்போவில் இருந்து திருநெல்வேலி தபால்கட்டை சந்தி வரையான பலாலி வீதிக்கு மிக அண்டிய பிரதேசத்தில் அல்லது கோண்டாவில் உப்புமடச்சந்தியில் இருந்து கொக்குவில் இந்துக்கல்லூரி வரையான காங்கேசன்துறை வீதிக்கு மிக அண்டிய பிரதேசத்தில் இரண்டு வாகனங்கள் தரிக்கக் கூடியதாகவும் மின் கம்பங்கள் இறக்கி வைக்கக் கூடிய இடவசதியும் உள்ள இடம் வாடகைக்கு தேவை. தங்களின் விண்ணப்பங்களை 24.12.2010 திகதிக்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

(சி - 1798)

"ஜெய் குருதேவ்"

THE ART OF LIVING

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் இலங்கைக்கான வருகையை முன்னிட்டு சிறப்பு பயிற்சிகள் (பாகம் - 1)

(யோகாசனம், தியானம், சிறப்பு மூச்சு பயிற்சி உள்ளடங்கியது)

அறிமுக உரை

இடம்:- 132, பலாலி வீதி, கந்தர்மடம்.
காலம்:- 13/12/2010 (திங்கட்கிழமை)
நேரம்:- மாலை 5.00 மணிக்கு

இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கான சுதர்சனக் கிரியா 13/12/2010 காலை 6.15 இற்கு நடைபெறும்.

(சி-1789)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி நெல்லியடியில் அமைந்துள்ள பிரதேசசபை முன்பள்ளியின் சிறுவர் தின விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சிக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) எஸ்.புஸ்பலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை சிறுவர்களின் கலைநிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உடுப்பிட்டி செய்தியாளர்)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு யோகாசனப் பயிற்சிகள்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அடுத்த மாத ஆரம்பம் முதல் யோகாசனப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இவர்களின் பயிற்றுவிப்பாளராக சமின் வர்ணகுல நியமிக்கப்பட்டு உள்ளார்.

இவரது யோகா அமைப்பு எம்.பிமாரின் மனம், உடல், ஆன்மா ஆகியவற்றுக்கான யோகா என்கிற தலைப்பில் வழிகாட்டி நூல்களை வெளியிட்டுள்ளது.

நாட்டில் தற்போது அமைதி நிலவுகின்ற போதிலும் அமைதி அற்றவர்களாகவும் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானவர்களாகவும் எம்.பிமார் உள்ளனர்.

மூச்சுப் பயிற்சிகள் மற்றும் அங்கப் பயிற்சிகள் ஆகியன எம்.பிமாருக்கு ஒழுக்கம், நன்னடத்தை சுய கட்டுப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்தும் என்கின்றார். நாடாளுமன்ற அமர்வுகளின் ஆரம்பத்தில் யோகாப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (பீரீ-4)

சம்பளப்பட்டியலில் கையொப்பமிடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளின் நிரந்தர ஆசிரியர்களில் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களிற்குட்பட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கான டிசம்பர்மாத சம்பளப்பட்டியல் கையொப்பமிடுவதற்காக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்படுகின்றது.

எனவே குறித்த ஆசிரியர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையிலுள்ள சம்பளப் பட்டியலில் கையொப்பமிடுமாறு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ச-5)

இலங்கைப் பணிப்பெண்ணை சித்திரவதைக்கு உட்படுத்திய கட்டார் எஜமானருக்கு அபராதம்

(கொழும்பு)

இலங்கை வீட்டுப் பணிப்பெண் ஒருவரை சித்திரவதைக்கு உட்படுத்திய கட்டார் எஜமானுக்கு அந்நாட்டு பொலிஸார் அபராதம் விதித்துள்ளனர்.

வீட்டுப் பணிப்பெண் ஒருவரை குறித்த கட்டார் எஜமானர் தீயால் சுட்டு துன்புறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சித்திரவதைக்குள்ளான பெண் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு இரண்டாண்டுகால சம்பளமான 6 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா நட்ட ஈடாக வழங்கப்பட்டதுடன் நாடு திரும்புவதற்கான விமான டிக்கட்டையும் எஜமானார் வழங்க வேண்டுமென கட்டார் பொலிஸார் அறிவித்துள்ளனர். (பீரீ-4)

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை குளிர்நீரில் பப்படம் பொரிப்பதற்கு நிகரானது

ரவி கருணாநாயக்க எம்.பி. விமர்சனம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை குளிர் நீரில் பப்படம் பொரிப்பதற்கு நிகரான தென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்ட மூன்றாம் வாக்கெடுப்பு விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பழைய ஒரு ரூபா நாணயக் குற்றிக்கும் புதிய ஒரு ரூபா நாணயக் குற்றிக்கும் இடையிலான வேறுபாட்டை போன்று அரசாங்கத்தின் வருமானமும் வீழ்ச்சியடைந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் மயப்படுத்தல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் 1994 ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சி செய்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்கள் 98 அரசாங்க நிறுவனங்களை தனியார் மயப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் 38 நிறுவனங்கள் மட்டுமே தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன என இவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (பீரீ-4)

கலட்டிக் கிளையில் திருட்டுச் சம்பவம்

(பொலிகண்டி)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கலட்டிக் கிளையில் கடந்த வியாழக்கிழமை இரவுதிருட்டுஇடம்பெற்றுள்ளது.

கிளையின் முன்பக்க கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா பைக்கற்றுக்கள் மற்றும் சீனி என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இது குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து பொலிஸார் நேரில் சென்று தடயங்களை பதிவு செய்தனர். (ச-48)

ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் இனவாதத்தை தூண்டுகின்றனர்

அரியநேத்திரன் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களைக் கேவலமாக விமர்சித்துக் கொண்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா? என்று நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தின்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் காட்டமாக வினவியுள்ளார்.

நிதியமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் , நான் இந்தப் பாராளுமன்றத்திற்கு வந்த போது ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் இன வாதமின்றி நாகரீகமாக உரையாற்றுவார்கள் என நினைத்தேன். ஆனால் கடந்த வாரம் சபையில் உரையாற்றிய அமைச்சர் மேர்வின் சில்வா வன்னிமக்கள் துர்நாற்றம் பிடித்தவர்கள், குளிக்கமாட்டார்கள். எப்போதாவது மழை வந்தால்தான் நீராடுவார்கள் என்று மிகக் கேவலமாகத் தமிழ் மக்களை இழிவுபடுத்தியுள்ளார்.

அமைச்சர்கள் இப்படிப் பேசினால் சமூகத்தில் நல்லாட்சியை எப்படி ஏற்படுத்துவது? புலிகள் இயக்கம் ஒழிக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் எதற்காக மீண்டும் அதனைப்பற்றி பேச வேண்டும். எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தைப் பற்றிக் கற்பிக்க

வேண்டும். தமிழ் மக்களின் நலன் கருதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகளை மீளாய்வுக்கு உட்படுத்தியுள்ளது.

அதன் ஒரு சமிக்ஞையாகவே வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பில் இருந்து நாம் ஒதுங்கியிருக்கின்றோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு, அதன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருப்துடன், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை ஈழுத்துடிக்காமல் இதய சுத்தியுடன் செயற்பட முன்வந்தால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயாராகவுள்ளது.

அதற்காக வரவு- செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களிக்காமல் இருப்பதற்கு எடுத்த தீர்மானத்தை தொடர்ந்து கூட்டமைப்பைப் பலவீனமாகக் கருத வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (பீரீ-2)

எம்.பி.களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை அதிகரிக்க வேண்டும்

மாவை.எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவு நிதி ஒதுக்கீட்டை 10 மில்லியன் ரூபாவாக அதிகரிக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிதியமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தற்போது பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுகிறது. ஆனால் வடக்கு, கிழக்கு பிரதேசம் யுத்தத்தால் வெகுவாக பாதிக் கப்பட்டுள்ள நிலையில் இத்தொகை போதாமல் உள்ளது. எனவே , இத் தொகையை 10 மில்லியன் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என கூறினார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தின் கனிம வளங்கள் சுரண்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அங்குள்ள சுண்ணாம்புக் கற்கள் பெருமளவில் சுரண்டப்படுவதாகவும் இதனால் சுற்றாடல் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் அவர் கூறினார். (பீரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக் கலசம்

சங்குநாதம்

அன்னையே உனக்காக

ஈரைந்து மாதங்கள்
கருவினிலே தாங்கி
ஈன்ற பின்னும் பணிவிடை
பல புரிந்து
உன் உதிரம் பாலாக்கி
எனக்கு ஊட்டி
உன் இரவை வெறுமையாக்கி
எனக்கு நல் இரவாக்கி
இளவட்டம் ஆகு மட்டும்
அழகாய் உதவி பல செய்து
இன்று நீ
ஓர் வயோதிபத் தாயாய்
உனக்காக
உன் அன்பிற்காக
உன் தியாக வாழ்விற்காக
என்ன செய்யப் போகிறேன்
அன்னையே!
உனக்காக நான்...

அ.ஜெனற்சி
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

தண்டனை

என் மனதிலே
அவளுக்கு தண்டனை
அளித்து விட்டேன்
காதல் தீவிரவாதி என
குற்றம் சாட்டி
சிறை செய்தேன் - ஆயுள்
முழுவதும் என் இதயத்தில்!

S.மணிவண்ணன்
யா/இந்துக்கல்லூரி

நட்பாகும் உலகம்

காந்தும் இசை ஆகும்
நாம் வாசித்தால்!
வார்த்தைகள் கவிதை ஆகும்
நாம் யோசித்தால்!
இந்த உலகமே நட்பாகும்
நாம் நேசித்தால்!

வி.சிவதாஸ்
மானிப்பாய்

பதில் கூறு...

நான் இழைத்த
பாவம் தான் என்னவோ?
உனைப் பார்த்தது தப்பா?
உன்னுடன் பழகியது தப்பா?
இல்லையேல் உன் மேல்
பாசம் வைத்தது தான் தப்பா?
நான் செய்த பாவம் தான்
என்னவோ நீ சொல்வாய்...?

R.றாஜி

பிரிவு

உன் பிரிவுக்காலம்
நீண்டு செல்கையில்
என் ஆயுட்காலம்
குறைந்து செல்கிறது
மரணம் என்ற சக்கரத்தை
நோக்கியவாறே

செ.விஜயசா
வட்டு.இ.க

மரணம்

மனிதனாகப் பிறந்து விட்டால்
மரணம் உனக்கு
நிச்சயம் இல்லை எனின்
நீ மனிதன் என்று
சொல்வதில் அர்த்தமில்லை

பி.சுகந்தா
வண்ணார்பண்ணை

அன்பு

அன்பினால் ஆகாது என்று
அவனியில் ஏது மில்லை
துன்பமே துடைத்தழிக்கும்
தூயமருந்து தீதுவே தான்

பிள்ளைமேற் காட்டு மன்பு
பிழுகொள் குடும்ப அன்பு
வள்ளலாய் வனிதை மீது
வழங்கிடும் காத லன்பு

சூத்தாடி
வி.சி.குஞ்சிதபாதம்

என் உயிரே!

என்னை விட்டுவிட்டு
சிறகடிக்கப் பார்க்கிறாயே!
என் அன்பான காதலாலே
நீ அறிய மாட்டார்யா?
நான் தான் -உன்
சிற கென்று?

ம.அம்சா
நயினாதீவு

இமயம் தொட...

தீமை செய்பவன்
தனக்கும் மற்றவர்களுக்கும்
தீமை செய்கின்றான்
என்றார் விவேகானந்தர்
தீமை மேல் தீமை செய்து
நரகம் நோக்கி செல்வதை விட
பிறருக்கு நன்மை செய்து
பூமியிலே சுவர்க்கம் தேடு
அப்போது தான் – நீ
இமயம் தொடுவாய்

மாவை.நா.கஜேந்திரா

கவிதைத் துளிகள்

அமாவாசை இரவுகளையும்
விதவைகள் பட்டியலில்
இணைத்து விடுங்கள்...
அவர்கள் நெற்றிகளிலும்
பொட்டுகளைக் காண்பதில்லையே!

மீண்டும் செல்வோமா
எங்கள் பள்ளிகளுக்கு...
கற்பதற்காக அல்ல
விழி மூடிப்போன ஆசான்களுக்கு
சமாதி செய்வதற்கு...

நிலா
மருதோடை

மௌனத்தின் தேடல் - 48

மனப்பதிவு

சிதறடிக்கப்பட்ட பூமியின்
சரித்திரமொன்று
மழலைத் தலைமுறையின்
மனத்திரையில்
படமாகிறது

சி.வினோவர்மன்
புலியங்கூடல்

யாரை நீ சொல்வாய்

ஊரிழந்து உறவிழந்து
உடுக்க உடையிழந்து
செல்பவளே!
உன்னைத் துரத்துவது...?

ஆ.கபிலன்
மருதநகர்

போராட்டம்

யுத்தம் மட்டுமல்ல
இயற்கை கூட எம்மீது
இரக்கம் காட்டவில்லை
தவிப்போடு நிற்கின்றோம்
தண்ணீர் தேசத்தில்!

தி.கோபிநாத்
மட்டுவில்

போர் மேகம் சூழ்ந்ததென்று
வீடெல்லாம் போச்சு
கார்மேகம் சூழ்ந்ததென்று
தறப்பாளும் சேறாச்சு
தாயவளை சூழ்ந்ததெல்லாம்
அவன் கண்ணீர் வெள்ளம்

கி.சரண்ராஜ்
கிளிநொச்சி

துயரப் பெருங்கடல்

தண்ணீருக்குள் இருந்து
கண்ணீர் வடிக்கும்
உன் கண்ணீர்த்துளியை
யார்தான் அறிவாரோ!

ஷானுவி
பிளவத்தை

சொர்க்கம்

உணர்வுகள் உதாசீனம்
செய்யப்பட்டன- அப்போது
நீரன்னை அழைக்கிறாளோ
உங்களை
சொர்க்கம் காண்பிக்க?

ஈ.துஷாந்தினி
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலம்

வரம்பில்லாக் கண்ணீர்

வானம் அதன் கண்ணீரில்
வாழ்விடத்தை இழந்துவிட்டு
வாரிசுகளை சுமந்து கொண்டு
வரும் இவளைக் காண்கையிலே
வற்றிவிட்ட கண்ணீரும்
வரம்பின்றி பாய்கிறதே

ந.சீதா
யா/நெல்லியடி ம.ம.வி

இயற்கையின் கோபம்

இரக்கமில்லை இயற்கைதாயிடம்
என்று பரவது அனர்த்த வெள்ளம்
கரைசேர்க்க இயலாக் காகித ஓடமாய்
தடம்புரளுது வடக்கின் வள்ளம்

கு.இராமலிங்கம்
கழிபுரம்

வெள்ள நீரில் மிதக்கும்
கிராமம்
இவள் வீடோ
முற்றாக நாசம்...
தன் மழலைகளை
தனியே மீட்கப்
போராடும் பரிதாபம்

செ.ரவிசாந்
குப்பிளான்

முகவரி

தண்ணீரில் நின்று கொண்டு
முகவரியை தேடுகிறாள்!
மனச்சாட்சியற்ற மனிதமே
இவர்களை வாழவிடு!

அ.றூபன்
ஈச்சமோட்டை

வாழவைத்த தெய்வங்கள் தான்
இன்னும் வரவில்லை
வாழ்ந்து தான் என்ன பலன்
விரைவில் சூழ்கிவிடுவோம்

பொ.துவராசலிங்கம்
கொக்குவில்

எதிர்நீச்சல்

தாயே!
உன் பிள்ளைகளை
மழை வெள்ளத்தில் மட்டுமல்ல
சுயநலமிக்க இந்த உலகத்திலும்
எதிர் நீச்சலடிக்க கற்றுக்கொடு

S.கலக்ஷனா
சோப்பாய்

ந(நீ)ந்திக்கட(ல்)

நந்திக்கடலைக் கடந்த பிஞ்சுகளுக்கு
எந்தக் கடலும் அச்சமில்லை!
புன்னகைக்கிறது பாருமேன்...

மா.சுரேஷ்
அல்வாய் வடக்கு.

புரிந்து கொள்

மனிதா!
நீ கோபம் கொண்டால்
செயற்கையால் ஊரை அழிப்பாய்
ஆனால்...
இறைவன் கோபம் கொண்டால்
இயற்கையால் உலகத்தையே
அழிப்பான்.

S.ஷியாம்குமார்
இருபாலை

மன உறுதி

என் வாழ்வின் - இரு
கண்களாய்த் திகழும்
மழலைகள் உயிர்காக்க
தண்ணீரின் நடுவே
நடக்கிறேன்
மனஉறுதி தளராமல்...

வி.அபிசன்
அல்லையம்பதி

சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 49

அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 17.12.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமான் வழக்கில் திடீர் திருப்பம்

'வெற்றிகரமான 150 ஆவது நாள்' என அரசாங்கம் போஸ்டர் ஒட்டாததுதான் பாக்கி!

மற்றபடி அனைத்து விதமான இழுத்தடிப்பு வேலைகளையும் சீமான் விவகாரத்தில் செய்து பார்த்தது தமிழக அரசு.

ஆனாலும், சட்ட ரீதியானபோராட்டத்தால் தேசியப் பாதுகாப்பு சட்டத்தை உடைத்து வெளியேவந்திருக்கிறார் சீமான்!

ஏற்கனவே, வழக்கை விசாரித்த நீதிபதிகள் மாறியதால், விவகாரம் இழுத்துக் கொண்டே போனது. இந்த நிலையில், கடந்த 9 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றத்தில் சீமான் வழக்கு விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் எலிப் தர்மாராவ், ஹரிபரந்தாமன் ஆகியோர், "தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் ஒருவரை சிறையில் அடைக்க பொலிஸ் ஆணையாளர் அல்லது குற்றவியல் நீதிமன்றிற் குத் தான் அதிகாரம் உள்ளது. பொலிஸ் ஆணையாளர் ஊரில் இல்லை என்பதற்காக கூடுதல் ஆணையாளர் உத்தரவு பிறப்பித்தது சட்டப்படி செல்லாது.

அதனால், அந்த உத்தரவு இரத்து செய்யப்படுகிறது!" எனச்சொல்ல... நீதிமன்ற வளாகமே பட்டாசு சத்தத்தில் படபடத்தது!

சீமான் விடுதலையை இனிப்புக் கொடுத்துக் கொண்டாடிய 'நாம் தமிழர்' அமைப்பைச் சேர்ந்த சின்னசீமான், "இரண்டாவது முறை யாக அண்ணன் மீது பாய்ச்சப்பட்ட தேசியப் பாதுகாப்பு சட்டம் பொய் என நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. அண்ணனின் பேச்சு வன்முறையைத் தூண்டும் அளவுக்கு இல்லை! என்பதை உறுதியாகச் சொன்ன நீதிபதிகள் அரசின் திட்டமிட்ட பழிவாங் கலையும் சுட்டிக்காட்டினார்கள். எங்கள் தரப்பு நியாயத்துக்கு இதை விடப் பெரிய வெற்றி வேறு இல்லை.

அண்ணனை சிறையில் தள்ளி எங்களின் இயக்கத்தையே நசுக்கிவிட நினைத்தவர்கள் இன்று நாணி நிற்கிறார்கள். அவர்களின் எண்ணத்தைப் பொய்யாக்கும் வகையில் எங்களின் நாம் தமிழர் இயக்கம் இன்றைக்குத் தவிர்க்க முடியாத சக்தியாக எழுச்சி பெற்றுள்ளது. 'வெளியே வந்துதான் முழுக் கச்சேரியை ஆரம்பிக்கணும்' என அடிக்கடி சொல்வார் அண்ணன். இனி நடக்கப்போகும் கச்சேரியைப் பார்க்கத்தானே போகிறீர்கள்!" என்றார் உற்சாகத்தோடு.

இரா.சரவணன்

இதற்கிடையில் தீர்ப்பு குறித்த விபரம் வேலூர் சிறையில் இருந்த சீமானிடம் சொல்லப்பட... அவர் முகத்தில் புன்னகை.

"பழிவாங்கும் சாக்கில் பெட்டி கேஸ் போடுற மாதிரி தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் பயன் படுத்துறங்க... எந்த விவகாரத்துக்கு எந்தப் பிரிவில் வழக்குப் போடணும் கிறது கூடத் தெரியாமல், சட்டத்தையே சந்தி சிரிக்கவைக்கிறாங்களே..." என சிறைத் தோழர்களிடம் சொல்லிச் சிரித்திருக்கிறார் சீமான்.

சுதந்திரத்திற்காக லண்டனில் திரண்ட தமிழர்கள்

'மக்கள் சுதந்திரத்தை வென்றடைய வேண்டும் என்று விரும்பும்போது, ஆகாய விமானத்தைக் கல் எறிந்து வீழ்த்துவார்கள். இராணுவ டாங்கிகளை வெறும் கையால் திருப்புவார்கள்!' பாடிஸ்டா நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட ஃபிடல் காஸ்ட்ரோ, தனது வாக்கு மூலத்தில் சொன்னது இது! கடந்த வாரம், லண்டன் வீதிகளில் இது நிஜமாகவே நடந்தது. இலங்கை தேசத்தின் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவுக்கு இங்கிலாந்து அரசு ஆறு அடுக்குப் பாதுகாப்பு கொடுத்தாலும், அவர் தங்கி இருந்த விடுதியைச் சூழ்ந்த தமிழர்களின் முழக்கத்தில் ஆறு நாட்கள் பயணத்தை இரண்டே நாட்களில் முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பினார்.

முல்லைத்தீவில், கிளிநொச்சியில், வன்னியில் திரண்ட தமிழர்கள் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. ஆனால் லண்டனில் நின்றவர்கள் கைகளில் ஆயுதங்கள் இல்லை. நெஞ்சுரம் இருந்தது. அதில் 'நம் கண் முன்னால் இத்தனை பேரைச்சாகக் கொடுத்துவிட்டோமே' என்ற குற்ற உணர்வும் கூடுதலாக இருந்தது. கண்ணிவெடிகள் சாதிக்க முடியாததை அவர்கள் டிசம்பர் 2ஆம் திகதி நிரூபித்துக் காட்டி இருக்கிறார்கள்.

இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் நடந்தனவா என்பதை விசாரிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு யஸ்மின் சூகா, மார்சுகி டரூஸ்மன், ஸ்ரிவன் ரட்னர் ஆகியோர் வரும் ஜனவரி மாதம் அறிக்கை அளிக்க இருக்கிறார்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகப்பெரிய நெருக்கடி காத்திருக்கிறது. இதை உடைப்பதற்குத்தான் பகீரத முயற்சி செய்து வருகிறார் ஜனாதிபதி.

லண்டனுக்குப் போவதைத் தனது வாழ்நாள் வெற்றியாக நினைத்து இருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. மூன்று இலட்சம் ஈழத் தமிழர்கள் அங்கு

இங்கிலாந்து தான் தமிழர் தாயகம் என்று சொன்னால் தப்பா?

இருக்கிறார்கள் என்பது மட்டும் . இதற்குக் காரணம் அல்ல. போர்க் குற்றவாளியாக அவரைக் குற்றம் சாட்டும் முக்கிய நாடுகளில் பிரிட்டன் முதலாவது நாடு. அங்கே போய்த் திரும்பிவிட்டால் போதும் என்று ஜனாதிபதி நினைத்தார்.

ஆனால் அன்றைய தினம் சனல் -4 தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோ காட்சிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதான கோபத் தீயில் நெய் வார்த்தன. கண்கள் கட்டப்பட்டு... இரண்டு கைகளும் பின்னால் பிணைக்கப்பட்டு... உடம்பில் ஒட்டுத் துணிகூட இல்லாமல் நிர்வாணமாக....

ஒவ்வொரு ஈழத் தமிழர்களும் சுட்டுக் கொல்லப்படும் அந்தக் காட்சிகளைப் பார்க்கவே பதறித் துடிக்கிறது. எப்படித்தான் அரங்கேற்றினார்களோ?

அருட்பிரகாசம் சோபனா என்கிற இசைப்பிரியா ஈழத் தமிழர் அனைவரும் அறிந்த பெயர். அவரது நளினமான குரலும் குறும்படங்களில் யதார்த்தமான நடிப்பும் அம்மக்களை வசீகரித்து இருந்தது. அந்த பெண் துடிதுடிக்கப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டார் என்பதை வீடியோ ஆதாரத்துடன் வெளிப் படுத்தியது சனல்-4. தமிழ் இனத்தில் பிறந்தவள் என்பதைத் தவிர இசைப்பிரியா மீது என்ன குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துவிட முடியும்?

தமிழர் வாழ்ந்த பகுதியில் எல்லாம் மனிதப் புதைகுழிகள் வெட்டப்பட்டதற்கான சட்டிலைட் படங்களை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. ஈராக் யுத்தக் கொடுமைகளை அம்பலப்படுத்திய விக்கிலீக்ஸ் இணையத்தளம் இப்போதுதான் இலங்கை தொடர்பான ஆவணங்களை வெளியில் விட ஆரம்பித்துள்ளது.

இந்தக் கொலை பாதகச் சூழ்நிலை 2009 மே மாதத்துக்குப் பின்னர் மாறிப் போய்விடவில்லை. இணையத் தளத்தில் ஒரு தமிழ் இளைஞர் நான்கு வரி எழுதி இருக்கிறார். நான் குவைத்தில் இருக்கிறேன். சமீபத்தில் இலங்கை சென்று வந்த என் தமிழ் நண்பன் என்னிடம் 'என் ஊரில் 13,14 வயதுச் சிறுமிகள் எல்லோருமே

ஜூனியர் விகடன்

இப்போது கர்ப்பமாக இருக்கிறார்கள்' என்று அந் நாட்டின் நிலைமையைச் சொன்னதும் என் நெஞ்சம் பதறியது. எனக்குத் தமிழக இந்திய அரசுகள் மீது வெறுப்புத்தான் வந்தது என்று எழுதி இருக்கிறார்.

குளோபல் தமிழ் அமைப்பைச் சேர்ந்த இமானுவேல் அடிகளார் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது வழக்கு பதிவு செய்திருப்பதன் மூலம் இங்கிலாந்துதான் தமிழர் தாயகம் என்று சொன்னால் தப்பா?

ப.திருமாவேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட வரியிறுப்பாளர்களிடமிருந்து இவ்வருடம் 15 கோடி ரூபா அறவீடு

பிரதி ஆணையாளர் தெரிவிப்பு

உள்நாட்டு இறை வரித்தி ணைக் களத்தின் யாழ். பிராந்திய அலுவல கத்தினால் 2010ஆம் ஆண்டிற் கான வரியாக கடந்த மாதம் வரை யில் வரியிருப்பாளர்களிடமிருந்து 15 கோடி ரூபாய் அறவிட்டுள்ளதாக பிரதி ஆணையாளர் கே.இரா சையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகை யில் தற்போது வரி சேகரிப்பானது இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தில் வரி விதிப்பா ளர்களிடமிருந்து 8 கோடி ரூபா வரி யாக சேகரிக்கப்பட்டது. ஆனால் இந்த வருடம் கடந்த மாதம் வரை யில் 15 கோடி ரூபா வருமான வரி விற்பனை புறள்வு வரிகளாக அற விடப்பட்டுள்ளது.

தாமாக வரி செலுத்துவதற்கு முன் வரும் வரியிருப்பாளர்களின் கடந்த செயற்பாடுகளையே பொருட் படுத்தாமல் அவர்களது பிரச்சினை களை மனிதாபிமானத்துடனும் நட்புரீதியுடனும்அணுகிஉரியநடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி வரி செலுத் துநர்களுக்கு சமூகத்தில் நன் மதிப் பும் முக்கியத்துவம் கிடைப்பதுமட்டு மன்றி அரசாங்கம் அவர்களை ஊக் குவிப்பதற்காக தங்க, வெள்ளி அட் டைகளை வழங்குகின்றது. அது மட்டுமன்றி அரசாங்கம் வாகன இறக்குமதியின் போது அவர்களுக்கு இறக்குமதிச் சலுகைகளையும் அளிக்கின்றது.

இவ்வாறு தங்க,வெள்ளி அட்டை களை வைத்திருப்பவர்களுக்கு விமான நிலையங்கள், வங்கிகள் என்பவற்றில் முன்னுரிமை அளிக் கப் படுவதோடு வி.ஐ.பி.நன்மதிப்பு வழங்கப்படுகின் றது.

யாழ்.பிராந்திய பணிமனை யில் வருமானக் கோவையையுடைய அனைவருக்கும் 01.04.2009 முதல் 31.03.2010 வரையான வரியி ருப்பாண்டு 2009/2010 விபரத் திரட்டுக்கள் அனுப்பி வைக்கப்பட் டுள் ளன. எனவே2009/2010ஆம் ஆண் டிற்கான வரி மதிப்பாண்டின் விபரங் களை வெளிப் படுத்துமாறும் கேட்டுக் கொள்வதோடு முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விபரத்திரட்டுப் படிவத் துடன் வரி மதித்தல் கொடுப்பனவு பணம் கட்டும் துண்டுகள் மற்றும் பிற ஆவணங்களுடன் யாழ். பிராந் திய அலுவலகத்திற்கு நேரில் சமர்ப் பிக்கும்படி அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ஸ்ரீ-4)

பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு உலருணவுப் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தொடர்ந்து பெய்த கன மழை காரணமாக பாதிக்கப்பட்ட அச்சுவேலி,பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க உறுப்பி னர்கள் மற்றும் பணியாளர்கள் 200 பேருக்கு தலா மூவாயிரம் ரூபா பெறுமதி யான உலர் உணவுப் பொருட் கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 4ஆம் திகதி பணிப்பாளர் சபை எடுத்துக்கொண்ட விசேட தீர்மா னத்திற்கு அமைவாக ,அங்கத்தவர் பணியாளர் இடர்காப்பு நிதியில் இருந்து 6 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஒவ்வொருவருக்கும் 20 கிலோ அரிசி,10கிலோ மா,3 சீனி, ஒரு கிலோ பருப்பு,ஒரு பால்மா பைக்கற்,200கிராம் தேயிலை வழங்கப் பட்டதாக சங்கப் பொது முகாமையாளர் பொ. செல்வராசா அறிவித்துள் ளார். (ஸ்ரீ-2)

குருநாகல் பிரதேசத்திலிருந்து வெடிமருந்துகள், துப்பாக்கிகள் மீட்பு

குருநாகலையை அண்மித்த ஹெட்டிப் பொலை பிரதேசத்திலிருந்து வெடிமருந்துகள், பல்வகை துப்பாக்கிகள் மற்றும் வோக்கி டோக்கி கரு விகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹெட்டிப்பொலையின் நாகொல்லான் கொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்தே அவை மீட்கப்பட்டுள்ளன. அவை புலிகளிடமிருந்து கைப்பற்றப் பட்டவையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. கடற்படையில் பணியாற்றும் ஒருவரின் சகோதரியொருவரே அவற்றை மறைத்து வைத்திருந்தார். கைப்பற்றப்பட்ட தொலைத்தொடர்பு சாதனங் கள் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் ரிவோல்வர் மற்றும் இடியன் துப்பாக்கிகள் உள்ளடங்கலாக அவற்றுக்குப் பயன்படுத்தும் பல்வேறு வகை துப்பாக்கி ரவைகளும் கைப் பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்ட மேற்படி வெடிமருந்துகள் மற்றும் உபகரணங்கள் என் பன இராணுவத்தினரிடம் கையளிக்கப்படாது களவாக எடுத்து வரப்படிருக் கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஸ்ரீ-2)

தனியார் பல்கலைக்கழக கனவு ஒருநாளும் பலிக்காது

உதுல் பிரேமரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் தனியார் பல் கலைக் கழக கனவு ஒரு நாளும் பலிக்காது என அனைத்து பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் அழைப்பாளர் உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

பிணையில் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் நடத்திய முதல் ஊட க வியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் குறைகளை விமர்சனம் செய்வோரை ஏதாவது ஓர் வழியில் சிறையில் அடைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வும் எவ்வாறெனினும் தொடர்ச்சியாக மாணவர் உரிமைகளுக்காக தாம் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மாணவர் கலகங்களில் ஈடுபடாதிருக்குமாறு உதுல் பிரே மரட்னவிற்கு நீதிமன்றம் பிணை வழங்கும் போது எச்சரிக்கை விடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ

தாய்லாந்தில் கைதான இலங்கையர்களில் சிலர் விசாரணையின் பின் விடுவிப்பு

(கொழும்பு)

தாய்லாந்தில் கைது செய்யப் பட்ட இலங்கையர்களில் சிலர் விடு தலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

தாய்லாந்தின் பாங்கொக் நக ரில் சுமார் ஐம்பது இலங்கைத் தமி ழர்கள் அண்மையில் கைது செய் யப்பட்டிருந்தனர்.

இவர்களில் சிலரை அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளின் பின் னர் விடுதலை செய்துள்ளதாக வெளி விவகார அமைச்சு அறிவித் துள்ளது.

உரிய விசா அனுமதியின்றி தாய்லாந்தில் தங்கியிருந்த காரணத் திற்காக இந்த இலங்கைத் தமிழர் கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எனினும் விசாரணைகளின் போது சிலரிடம் உரிய விசா அனு மதி காணப்பட்டதாகவும் இவ்வாறா னவர்கள் விடுதலை செய்யப்பட்டதா கவும் பொலிஸார் அறிவித்துள் ளனர். (ஸ்ரீ

இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.12 12

✠627- பைசண்டைன் பேரரசு இராணுவம் ஹெராகிளியஸ் தலைமையில் பாரசீ கப் படைகளைத் தோற்கடித்தன.

✠1098- சிரியாவின் மாரட்-அல்-நூமன் நகரை பாப்பரசர் இரண்டாம் ஏர்பனின் படை கள் தாக்கி 20 ஆயிரம் பொது மக் களைக் கொன்றனர்.

✠1787- பென்சில்வேனியா ஐக்கிய அமெரிக்கா வின் இரண்டாவது மாநிலமானது.

✠1812- ரஷ்யாவின் மீதான பிரெஞ்சுப் படை யெடுப்பு முடிவடைந்தது.

✠1817- நியூசவுத் வேல்ஸ் ஆளுநர் லக்லான் மக்குவாரி அவுஸ்திரேலியா என்ற பெயரை காலனித்துவ அரசுக்கு பரிந் துரைத்தார்.

✠1862- யாசூ ஆற்றில் ஐக்கிய அமெரிக்கா வின் யூ.எஸ்.எஸ். கைரோ என்ற ஆயு தம் தாங்கிக் கப்பல் கண்ணிவெடி யில் சிக்கி மூழ்கியது.

✠1871- யாழ்ப்பாணத்தில் முழுமையான சூரிய கிரகணம் அவதானிக்கப்பட்டது. இங் கிலாந்தின் வானியலாளர் நோர்மன் லொக்கியர் தலைமையில் ஒரு அறி வியலாளர் குழு இதனைப் பார்வையிடு வதற்கு யாழ்ப்பாணம் வந்தது.

✠1901- அட்லாண்டிக் கடலூடாக முதன் முத லாக இங்கிலாந்தில் இருந்து கன டாவின் நியூபின்லாந்தில் வானொலி சமிஞ்ஞைகளை மார்க்கோனி பெற் றார்.

✠1911- இந்தியாவின் தலைநகரம் கல்கத்தா விலிருந்து டில்லிக்கு மாற்றப்பட் டது.

✠1923- இத்தாலியில் போ ஆற்றின் அணைக் கட்டு வெடித்ததில் 600 பேர் கொல் லப்பட்டனர்.

✠1939- குளிர்காலப் போர்: பின்லாந்துப் படை கள் சோவியத் படைகளை டொல் வஜார்வி என்ற இடத்தில் இடம் பெற்ற சமரில் தோற்கடித்தன.

✠1940- இங்கிலாந்தின் ஷெஃபீல்ட் நகரில் உணவுவிடுதி ஒன்றின் மீது ஜெர் மனிய விமானங்கள் குண்டு வீசிய தில் 70 பேர் கொல்லப்பட்டனர்.

✠1941- இரண்டாம் உலகப்போர்: பிரித்தா னியா பல்கேனியாவின் மீதும் ஹங் கேரி,ருமேனியா ஆகியன ஐக்கிய அமெரிக்கா மீதும் இந்தியா ஜப் பான் மீதும் போரை அறிவித்தன.

✠1941- அமெரிக்கப் போர்க்கப்பல் வேக்தீவுக் கரைக் கப்பலால் நான்கு ஜப்பானி யக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித் தது.

✠1941- யூதர்களை வெளியேற்றும் திட் டத்தை அடொல்ஃப் ஹிட்லர் அறி வித்தார்.

✠1942-நியூபின்லாந்தில் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் 100 பேர் கொல் லப்பட்டனர்.

✠1948- மலேசியாவில் நிலை கொண்டிருந்த ஸ்கொட்லாந்துப் படையைச் சேர்ந்த 14 பேர் பட்டாங்காலி என்ற இடத் தில் உள்ளூர் பொதுமக்கள் 24 பேரைக் கொன்று கிராமத்தைத் தீ வைத்து எரித்தனர்.

✠1963- ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து கென்யா விடுதலை பெற்றது.

✠1979- ரொடீசியாவின் பெயர் சிம்பாவே யாக மாற்றப்பட்டது.

✠1984- மௌரித்தேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி முகமது கவுனா ஹைடாலா பதவி அகற்றப்பட்டு மாவோவுயா சிட் அஹமது டாயா புதிய ஜனாதிப தியானார்.

✠1985- கனடாவின் நியூபின்லாந்தில் ஐக்கிய அமெரிக்காவின் 248 இராணுவத்தி னரை ஏற்றிச்சென்ற விமானம் விபத் துக்குள்ளாகியதில் அதில் பயணஞ் செய்த அனைத்து 256 பேரும் கொல் லப்பட்டனர்.

✠1988- லண்டனில் இரண்டு தொடரூந்துகள் மோதியதில் 35 பேர் கொல்லப் பட்டு 100 பேருக்குமேல் காயமடைந் தனர்.

✠1991- ரஷ்யா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

பிறப்புகள்

✠1863- எட்வர்ட் மண்ச், ஓவியர் (இ.1944)

✠1927- ரொபர்ட் நாய்சு, பொறியலாளர் (இ.1990)

✠1949- ரஜனிகாந்த், தென்னிந்திய நடிகர்.

✠1950- எரிக் மாஸ்க்கின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.

✠1981- யுவராஜ் சிங், இந்திய கிரிக்கெட் வீரர்.

இறப்புகள்

✠1940- தியாகி விஸ்வநாததாஸ், நாடக நடிகரும், தேசியவாதியும் (பி.1886)

✠2006- இ.இரத்தினசபாபதி, ஈழப்போராட்ட இயக்கங்களில் ஒன்றான ஈரோஸ் என்ற ஈழ புரட்சிகர மாணவர் இயக் கம் என்ற அமைப்பை ஆரம்பித் தவர். (பி.1938)

997- களுத்துறை சிறைச்சாலைப் படுகொலைகள்: இலங்கையின் களுத்துறை சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியற் கைதிகள் சிங்களக் கைதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75 வரையான நிறுவனங்கள் பங்குச் சந்தையில் பட்டியலிடவுள்ளன

பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மூலதனத்தை 2011ஆம் ஆண்டு முடிபிற்குள் 3.3 டிரில்லியன் ரூபாய் (29.67 பில்லியன் அமெரிக்க டொலர்)ஆக 45வீதத்தால் அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளதாக இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலதிகமாக 75 வரையான நிறுவனங்கள் பட்டியல்படுத்தப்படவுள்ளன. இதன்மூலம் ஒரு டிரில்லியன் (ரூபாய்) புதிய மூலதனம் 2011இல் சந்தைக்கு வரவுள்ளது. இதனால் இந்த இலக்கை அடைவது இலகுவானது எனபிணைகள்பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC)தலைவர் மலிக் காதர் தெரிவித்துள்ளார்.

பெரும் பகுதி பங்குகளை அரசாங்கம் கொண்டுள்ள 5 பெரிய கம்பனிகள் இவ்வாறு பட்டியல் படுத்தப்படவுள்ளன.

இவ்விடயத்தில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. அண்மையில்' கோல் இந்தியா ' நிறுவனம் பங்குகளை வெளியிட்டு அமோக வரவேற்பைப் பெற்றது.

எதிர்வரும் ஜூன் மாதத்திற்கிடையில் 35 நிதிக்கம்பனிகள் மற்றும் சிறிய தனியார் நிறுவனங்களும் பட்டியல்படுத்தவுள்ளன.

தற்போதைய சந்தை மூலதனம் 2.3 டிரில்லியன் ரூபாய் (20 பில்லியன் அமெ.டொலர்). தொடர்ந்து பல நிறுவனங்கள் சந்தைக்கு வரவுள்ளதால் சந்தை மூலதனம் அதிகரிக்கும்.அடுத்தஆண்டுஅதிக வெளிநாட்டு மூலதனம் சந்தைக்கு வரும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றார்.தற்போதைய வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வைத்திருத்தல் எல்லையான 20%ஐ அதிகரிக்கவும் கவனம்செலுத்துவதாகதெரிவித்தார்.

சகல நீதிக் கம்பனிகளும் பட்டியல்படுத்த வேண்டும்

அடுத்த 6 முதல் 8 மாதங்களில் சகல நிதிக் கம்பனிகளும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியல் படுத்தவேண்டும். இவ்வாறான நடவடிக்கையால் பங்குச்சந்தை மூலதனம் அடுத்த 2 முதல் 3 வருடங்களில் 2 மடங்கு அதிகரிக்கும் எனவும் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

2016ஆம் ஆண்டளவில் தனிநபர் வருமானத்தை 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.இதற்கு வங்கிகள் கடன் வழங்கும் சக்தியை இரட்டிப்பாக,அதாவது தற்போதைய 1800 பில்லியன் ரூபாயிலிருந்து அண்ணளவாக 4 டிரில்லியன் ரூபாயாக அதிகரிக்கவேண்டும். இதன் மூலமே அடுத்த 5 வருடங்களில் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க முடியும் என்றார்.

தனியார்துறை ஊழியர்களுக்கு ஊ.சே.நிதியம்; ஊ.ந.நிதியத்துக்கு மேலதிகமாக ஓய்வூதியம்

தொழிலமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு

ஊழியர் சேமலாப நிதி ,ஊழியர் நம்பிக்கை நிதிக்கு மேலதிகமாக ஓய்வூதியக் கொடுப்பனவு ஒன்றை தனியார்துறை ஊழியர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என காமினி லொக்குகே நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாழ்நாள் முழுவதும் தொழிலாளர்கள் சிக்கலின்றி வாழ்வதற்கு வழிசெய்யும் வகையிலேயே இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இதற்கென தற்போது தொழில் செய்யும் ஊழியரிடமிருந்தும் தொழில் தருனரிடமிருந்தும் சிறு தொகை யொன்று அறவிடப்படும் என்றும் தெரிவித்தார்.

பத்தாயிரம் ரூபாய் சம்பளம் பெறும் ஒருவருக்கு இதன்மூலம் மூவாயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெற வழியேற்படும்.

தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி ,ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாது.அந்நிதி இலங்கை மத்திய வங்கியின் பராமரிப்பிலே உள்ளது.நாட்டில் அதனைவிட பாதுகாப்பானவேறுசிறந்தஇடம்கிடையாது.

இதுவரை 850 பில்லியன் ரூபாய் நிதி வைப்பிலுள்ளது. அதற்கென 13.7% வட்டியும் வழங்கப்பட்டு வருகிறது.அடுத்த மாதம் இதன்மூலம் கடன் பெறுவதற்கான விசேட சட்டம் மூலம் ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். அதற்கிணங்க அங்கத்தவர் ஒருவர் 3 இலட்சத்தை ஊழியர் சேமலாப நிதியாக கொண்டிருந்தால்அதில் 30 வீதம் அவருக்கு கடனாக வழங்கப்படும் என்றார்.

80 லட்சம் பேருக்கு ஓய்வூதியம்

தற்போது ஓய்வூதிய சம்பளம் கிடைக்காத 80 இலட்சத்துக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் வழங்கும் நிதியத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளது. அதன்படி தனியார் துறையில் பணிபுரியும் 20 லட்சம் பேர்,வெளிநாடுகளில் பணிபுரியும் 30 லட்சம் பேர்,விவசாய ,மீன்பிடி,சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள 30 லட்சம் பேர் என மொத்தமாக 80 லட்சம் பேர் பயன் பெறுவர். இவ்வாறான இரு நிதியங்கள் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை முகாமைத்துவத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் தர்ம தீர சிங்க தெரிவித்தார்.

தனியார் துறையில் பணிபுரிவோர் தமது சம்பளத்தில் 2 சதவீதத்தையும் வேலை வழங்குநர் 2 சதவீதத்தையும் இந்நிதியத்துக்குக் கொடுக்க வேண்டும்.அதற்குப் புறம்பாக சேவை வழங்குநரினால் சேவையாளரின் முழுமையான ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான தொகையை இந்த நிதியத்துக்கு வழங்கவேண்டும். சேவையாளர் ஓய்வூதியம் பெறும்போது பெற்றுக்கொள்ளும் ஊழியர் சேமலாப நிதியத்தின் 2 சதவீதத்தை எதிர்கால ஓய்வூதிய சம்பளத்துக்காக இந்த ஓய்வூதிய சம்பள நிதியத்துக்கு பங்களிப்பு செய்யவேண்டும்.இந்த நிதியத்திலிருந்து ஓய்வூதிய சம்பள நன்மையைப்பெற குறைந்தபட்சம் 10 வருடங்கள் அதற்கு பங்களிப்பு செலுத்தப்படவேண்டும்.

பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

துறை	கடந்த வாரம்	இந்த வாரம்
அனைத்துப் பங்கு விலைச்சுட்டி	6547.68	6432.75 ⇩
மிலங்கா விலைச்சுட்டி	7055.45	6885.45 ⇩
விலை அசைவுகளின் அடிப்படையில்	புரள்வு (ரூபா.மில்.) 9,330.00	

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): ஹ்ஜே (57.50),புளூ டைமன்ஸ் (4.00), நேஷன் லங்கா(21.50),பிரேமல் கிளாஸ்(7.70),புளூ டைமன்ஸ் (X) (2.20).

சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):யுனைட்டட் மோட்டார்ஸ் (107.10),செலின் சிங்(316.00),ஓட்டோரோம்(405.30), சி.ஐ.ரி(190.00), உடபுசல்லாவ(40.60).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் (ICASL) ஒழுங்கு செய்யப்பட்ட 46-வ வருடாந்த அறிக்கை விருது வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் கொழும்பு சினமன் கிராண்டில் நடைபெற்றது. ஹற்றன் நஷனல் வங்கி, நிதிநிலை அறிக்கை 2010-ல் ஒட்டுமொத்த அடிப்படையில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது. வெள்ளிப் பதக்கத்தை கொமர்ஷல் வங்கியும்,யூனியன் அஷ்ரன்ஸும் பகிர்ந்து கொண்டன.இதேவேளை ஹேலீஸ் மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் என்பன வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டன.

எச்.என்.பியின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான இராஜேந்திரா தியாகராஜா,சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம விடம் இருந்து கார்டினர் ஞாபகார்த்த கிண்ணத்தை பெற்றுக் கொள்வதையும் படத்தில் காணலாம்.

சுற்றுலாத்துறைக்கு புதிய லோகோ

Refreshingly srilanka Visit 2011 WONDER OF ASIA

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் ' விசிட் 2011' என்ற எண்ணக்கருவில்,இலங்கை சுற்றுலா சபை புதிய இலட்சினையை அறிமுகப்படுத்தியுள்ளது.8 வர்ணங்களைக் கொண்டதாக மேற்படி இலட்சனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா சபைத் தலைவர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

ஆசியாவின் ஆச்சரியம் என்ப திலுள்ள 12 எழுத்துக்களுக்கு ஏற்ப 12 மாதங்களும் பீச்,விளையாட்டு மற்றும் அது சார்ந்த சுற்றுலா, எம்.ஐ.சி.ஈ.,மக்கள் மற்றும் கலாசாரம்,சமய சுற்றுலா ,திருமணம் மற்றும் தேன்நிலவு சுற்றுலா,சுகாதாரம்,வரலாற்று சுற்றுலா, வன சுற்றுலா, சமூக சுற்றுலா ,உணவு மற்றும் பொருட் கொள்வனவுக்கான சுற்றுலா என அர்ப்பணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வேலைவாய்ப்பில் 8% சுற்றுலாத் துறையால்

பிரயாணம் மற்றும் சுற்றுலாத் துறை 9% மொ.தே.உற்பத்தியையும்,2010இல் 235 மில்லியன் வேலைவாய்ப்பையும்,8% உலகளாவிய வேலைவாய்ப்பையும் அளித்துள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)தெரிவித்துள்ளது.இதேவேளை 2019இல் 296 மில். வேலைவாய்ப்பு உருவாகும் என ஐ.நாவின் உலக சுற்றுலா அமைப்பு அதன் எதிர்பார்ப்பை ஜெனீவாவில் வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

($) (வார இறுதியில்)

நாணயம்	கொ/வு விலை ரூபா.	வி/னை விலை ரூபா.
ஐக்கிய அமெரிக்க டொலர்	110.15	111.85
பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்)	173.17	177.22
யூரோ (ஐரோ.ஒன்றியம்)	144.96	149.20
சுவிஸ் பிராங்	111.54	114.41
கனேடிய டொலர்	108.50	111.41
அவுஸ்திரேலிய டொலர்	107.81	110.98
சிங்கப்பூர் டொலர்	83.64	85.98
ஜப்பான் யென்	1.30	1.34
இந்திய ரூபாய்	சுட்டி விலை 2.46	
ஐக்.அரபு இராச்சிய டிராம்	சுட்டி விலை 30.23	

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA) இந்த வருடம் கடந்த திங்கட்கிழமை 2 மில்லியன் கொள்கலன்களைக் கையாண்டு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. இது தனியார்துறையால் முகாமை செய்யப்படும் சவுத் ஏசியா கேற்வே ரேமினல் கையாண்ட அளவைவிட அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டுமில்லியனாவது கொள்கலனை துறைமுகங்கள் மற்றும் வருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் சுஜாதா குரே கொடியசைத்து இறக்குவதையும்,அருகில் துறைமுக அதிகார சபைத் தலைவர் பிரியத் பிவிக்கிரம,முகாமைத்துவப் பணிப்பாளர் நிகால் கெப்பெட்டிப்பொல மற்றும் துறைமுக அதிகாரசபை அதிகாரிகளையும் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீக்கிரமே வருவேன்... நல்லதே நடக்கும்! ரசிகனிடம் ரஜினி சத்தியம்

ஒவ்வொரு வருடமும் "டிசம்பர் 12" தமிழக கலண்டரில் சிறப்புத்தினம். அது ரஜினியின் பிறந்தநாள்!

" ரஜினி அரசியலுக்கு வருவாரா, மாட்டாரா?" என்கிற பட்டிமன்றம் தொடங்கி, அடுத்த பட எதிர்பார்ப்பு வரை " பாட்ஷா"வுக்குப் பிறகான அனைத்து ரஜினி பிறந்த நாட்களுமே சென்சேஷன்தான். இந்த முறை ஒரு தந்தையாகத் தன் குடும்பக் கடமைகள் நிறைவேற்றிய திருப்தி, 'எந்திரன்' வெற்றி என உச்சக்கட்ட உற்சாகச்சூழல் ரஜினியைச் சுற்றி. ஆனால், சௌந்தர்யா திருமணத்துக்கு" ரசிகர்கள் வரவேண்டாம்" என்று ரஜினி அறிவித்ததும், அதைத் தொடர்ந்த சர்ச்சைகளும் திருஷ்டி. திருமணத்துக்கு என்று இல்லை, பல வருடங்களாகவே ரஜினி தன் ரசிகர்களைச் சந்திப்பது இல்லை என்பதுதான் ரசிகர்களுக்கு அவர் மீதான ஆகப் பெரிய அதிருப்தி.

இந்தச் சூழலில் ரஜினியைத் தனியே சந்திக்கும்படி வாய்ப்பு ஒரு ரசிகனுக்குக் கிடைத்தால்? சந்தித்து, ரஜினியிடம் வகைதொகை இல்லாமல் கேள்விகளும் கேட்டுத் திரும்பியிருக்கிறாபழனி பாட்ஷா என்கிற ரஜினி ரசிகர்.சமீபத்தில், துரை தயாநிதியின் திருமணத்துக்காக மதுரைக்குச் சென்ற ரஜினியை கும்பலாகச் சூழ்ந்து கொண்டார்கள் ரசிகர்கள். ரஜினியின் கார்வேகம் எடுக்க, பின்னாலேயே தொடர்ந்து ஓடிவந்த கார்த்திகேயன் என்ற வாலிபர் விபத்தில் பலியானார். அந்த இளைஞரின் குடும்பத்தை ரஜினி சந்திக்க விரும்ப... அவர்களை அழைத்து வரும் பொறுப்பு மன்றத் தலைவர் சுதாகரால், பழனி பாட்ஷாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 4ஆம் திகதி காலை 11 மணிக்கு கார்த்திகேயனின் குடும்பத்தினரை அழைத்துக்கொண்டு ராகவேந்திரா மண்டபத்தில் ஆஜரான பழனி பாட்ஷா. ஒட்டுமொத்த ரசிகர்களின் ஆதங்கத்தையும் அங்கே ஒலித்திருக்கிறார்." கார்த்திகேயனின் குடும்பத்தினரைப் பார்த்ததுமே தலைவருக்கும் கண்கள் கலங்கிவிட்டன. கார்த்திகேயன் குடும்பத்தோடு குரூப் போட்டோ எடுத்துக்கிட்டவர் நாலு இலட்ச ரூபாய் பணத்தை அவங்ககிட்ட கொடுத்தார். கார்த்திகேயனோட அம்மா கதறி அழ ஆரம்பிச்சிட்டாங்க. தலைவர் அந்தம்மாவைத் தேத்தினப்ப, " உங்ககூட சேர்ந்து படம் எடுத்துக்கணும்கிறதுதான் என் பையனோட ஆசை.அதுகூட நிறைவேறாமப் போச்சு.

இன்னிக்கு நாங்க எல்லோரும் உங்க கூட படம் எடுத்துக்கிறோம். அதைப் பார்க்கக்கூட அவன் இல்லாமப் போயிட்டானே என்னு அழுதாங்க. உடனே கார்த்திகேயனோட போட்டோவை வாங்கின தலைவர். அதைக் கையில்வைத்துக் கொண்டு போஸ் கொடுத்தார். "கவலைப்படாதீங்கம்மா.. கார்த்தியும் நானும் சேர்ந்து எடுத்துக்கிட்ட படமா நினைத்து இதை வைத்திருப்பாங்கன்னு சொன்னார்.

அந்த வார்த்தையில் சுத்தி நின்ற எல்லோருமே கலங்கிட்டோம் சார்!" என விவரித்த பழனி பாட்ஷா, ஒரு ரசிகனாக ரஜினியோடு உரையாடிய நிமிடங்களையும் பகிர்ந்து கொண்டார்.

" சமீப காலமா நீங்க ரசிகர்களைச் சந்திக்கிறது இல்லை. ரசிகர் மன்ற மாநாடு போடுகிறது இல்லை?"

"சீக்கிரமே எல்லாம் சரியா கிடும். உங்க எல்லோரையும் பார்க்கணும் எனக்கு மட்டும் ஆசை இல்லையா கண்ணா? நேரம் கை கூடட்டும். நிச்சயம் சந்திக்கிறேன். அதுவரைக்கும் நீங்க உங்க நேரத்தை குடும்பத்துக்காகச் செலவிடுங்க!"" 'சட்டமன்ற நாயகனே' 'நாளைய ஆட்சியே' என்னு நாங்க அடிக்கிற போஸ்டர்களைப் பார்க்கிறப்ப என்ன நினைப்பீங்க தலைவரே?

"நான் எல்லாத்தையும் பார்த்துக்கிட்டுதான் இருக்கேன். ரசிகர்கள் எனக்காக ஏன் இப்படிச் செலவு பண்றாங்கன்னு தெரியலை. சீக்கிரமே இது சம்பந்தமாப் பேசிடலாம்! நான் மதுரைக்கு வந்தப்ப , யாருக்குமே தெரியாதுன்னு நினைச்சேன். ஆனா அங்கே கூட அவ்வளவு ரசிகர்கள் திரண்டு வந்துட்டாங்க. அதுல துரதிஷ்டவசமா ஒரு விபத்தும் நடந்துடுச்சு. அதனாலதான் எல்லாத்துக்குமே தயங்க வேண்டி இருக்கு!"

"தலைவரே... ரஜினிங்கிற வார்த்தையோட சக்தி உங்களுக்குத் தெரியலை. நீங்க வருவீங்களான்னு தெரியாதப்பவே இத்தனை ரசிகர்கள் வந்தாங்க. நீங்க வருவீங்கன்னு தெரிஞ்சிருந்தா. ஏர்போர்ட்லயே ஆயிரக்கணக்கில் குவிஞ்சு இருப்பாங்க தலைவரே!"

"வேணாம் கண்ணா.. அப்படி எல்லாம் கூட்டம் சேர்க்க வேண்டாம்!"

"நீங்க அரசியலுக்கு வரணும்கிறதுதான் எங்க எல்லோருடைய ஆசையும். ஆனா, நீங்க அரசியல் சம்பந்தமா எதுவுமே சொல்ல மாட்டேங்குறீங்க நீங்க அரசியலுக்குவருவீங்களா... மாட்டீங்களா?"(ரஜினியிடம் ஹா...ஹா...சிரிப்பு)

"இந்தக் கேள்விக்கு நீங்க நிச்சயமா சிரிப்பீங்கன்னு தெரியும் தலைவா... தயவு பண்ணி வெளிப்படையா சொல்லுங்க?""எல்லோருடைய நம்பிக்கையையும் மதிக்கிறவன் நான். எந்த முடிவையும் எடுத்தோம் கவிழ்த்தோம்னு எடுத்துட முடியாது. கண்ணா. நமக்கு மேல இருக்கிறவன் சரியான நேரத்தில் சரியா நம்மளை வழி நடத்துவான். இத்தனை வருடம் எல்லா விடயங்களிலும் என்னைச் சரியா வழி நடத்தியவன். அரசியலிலும் நாம் என்ன செய்யணும்கிறதை நிச்சயம் அடையாளம் காட்டுவான்!"

"இந்த சந்திப்பில் நீங்க என்ன சொன்னதா ரசிகர்கள் கிட்ட நான் சொல்றது?"

"எல்லாம் நல்லபடி நடக்கும்னு சொல்லுங்க. சீக்கிரமே சந்திக்க வருவேன். உட்கார்ந்து பேசுவோம். அப்புறம் நல்ல முடிவை எடுப்போம்!"

ரஜினியுடன் பழனி பாட்ஷா

திரைவிமர்சனம்

"சிவப்பு ரோஜாக்கள்" பாதிப்பில் கமல் மாதிரி திரியும் கோவிந்தன், தன் காதலியின் சொல்லே வேதமாக கருதும் சண்முகம், வீடியோக் கடை நடத்தி பெண்களை மயக்கும் உள்ளூர் ரோமியோ பெனிட்டோ என ஹீரோவின் நண்பர்கள் அனைவரும் காமெடி ஏரியாவை கைப்பற்றியிருக்கிறார்கள். அடிக்கடி நினைவில் வரும் காதலி, " ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கான்னு சொல்வாங்க. அந்தப் பெண்ணா நான் இருக்கணும்னு நினைக்கிறேன்..." என்று காதல் ததும்ப கூறிவிட்டு, அடுத்த நொடியே அந்த காவாலிப்பயலுவ கூட சேர்ந்து சுத்திறியே... உனக்கு வெட்கமா இல்லை" என்று எரிந்து விழும் அந்தப் பெண்ணின் நடிப்பிலும், வசனத்திலும் அதிர்கிறது அரங்கம்.

படத்தில் வரும் சின்ன கதாபத்திரங்கள் கூட இயல்பு மீறாமல் யதார்த்தமாக நடித்திருக்கிறார்கள். அவர்களின் ஹீரோயின் தாய்மாமன் ஜெயபிரகாஸ், ஹீரோவின் தாய் நீலாமணியும் கவனம் ஈர்க்கிறார்கள். யதார்த்தம் கெடாத ஒளிப்பதிவால் வி.எஸ். தேவராஜ் படத்துக்கு அழகூட்டுகிறார் அறிமுக இசை அமைப்பாளர் ஸ்ரீ விஜெய் நம்பிக்கை வரவு.

ஹீரோவால், பல்வேறு காலகட்டங்களில் தாக்கப்பட்டவர்கள் அதற்கு உடனடி ரியாக்ஷன் கொடுக்காமல் கிளைமாக்சில் நல்லவர்களாக மாறுவது வழக்கமான கோடம்பாகத்தனம். ஹீரோயினுக்கு ஹீரோவை காதலிக்க வைக்கும் சம்பவங்களில் அழுத்தம்குறைவு. ஹீரோயின் தாய்மாமனை ஹீரோ போட்டு அடிக்க, அது ஏன்என்று விசாரிக்காமல் ஹீரோயின் தந்தை கல்யாணத்தை நிறுத்துவதில் லாஜிக் இல்லை.

குத்துப்பாட்டு, முத்தக் காட்சி, டபுள் மீனிங் காமெடி என எதையும் நம்பாமல் கதையை மட்டுமே நம்பி, அதற்கேற்ற நடிகர்களை தேர்வு செய்து, நடிக்க வைத்து வெற்றியும் பெற்றிருக்கிறார் இயக்குநர் ஆர்.கே. சூரியபிரகாஷ். இனிமை மாறாத கொங்கு பகுதி பேச்சு வழக்கு, இரும்பு ஆலை எனும் கதைக் களம் என யதார்த்தமான கிராமத்தை கண்முன்னே நிறுத்துகிறார். ஹீரோவின் வழியே கதை சொல்வது பழைய பாணிதான் என்றாலும் அந்தக் கடைசி இரண்டு நிமிடத்தில் கைதட்ட வைக்கிறார்.

எனக்கும், கார்த்திக்கும் காதல் இல்லை

"கார்த்தியை காதலிப்பதாக சொல்வதில் உண்மை இல்லை. எந்த நடிகரையும் நான் காதலிக்கவில்லை" என்றார் தமன்னா. "பையா" படத்தில் கார்த்தி ஜோடியாக நடித்தார் தமன்னா. இதையடுத்து இப்போது மீண்டும் கார்த்தியுடன் சிறுத்தை படத்தில் நடித்து வருகிறார். இருவரும் காதலிப்பதாகவும் தன்னுடன் நடிக்க தமன்னா பெயரை கார்த்தி சிபாரிசு செய்வதாகவும் கோடம்பாக்கத்தில் கிசு.... கிசு வெளியாகின. இதுபற்றி தமன்னாவிடம் கேட்ட போது ,என்னுடன் நடிக்கும் ஹீரோக் களுடன் ஷூட்டிங் ஸ்பொட்டில் நட்பாக பழகுவேன். கார்த்தியுடனும் அப்படித்தான் பழகினேன். எனக்கும் கார்த் திக்கும் காதல் இல்லை என்று பலமுறை மறுத்துவிட்டேன். ஆனாலும் தொடர்ந்தும் வதந்திகள் பரப்பப்படுகிறன. என்னையும் கார்த்தியையும் இணைத்து பேசுவதே முட்டாள்தனம். அவரோடு இரண்டு படம் நடிச்சிட்டா காதல் வந்துடுமா. உடன் நடிக்கும் ஒரு நடிகர் அவர். அவ்வளவுதான். வேற எந்த உணர்வும் இல்லை. தயவு செய்து இதை எழுதுங்கள். இப்போதைக்கு சினிமாவில் கவனம் செலுத்துவது மட்டுமே எனது முதல் வேலை என்று கூறினார்.

வானம் சிம்பு சொல்லும் மாற்றம்!

சிம்பு, பரத், அனுஷ்கா ,சினேகா உல்லால் , பிரகாஷ்ராஜ், சோனியா அகர்வால் என வானம் படத்தில் நடிகர் பட்டாளமே இருக்கிறது. படப்பிடிப்பு முழுமையாக முடிந்துள்ள நிலையில் இதன் இசைச் வெளியீடும் நடந்து முடிந்துள்ளது. வழக்கமாகவே சிம்பு, யுவன் காம்பினேஷனில் வரும்பாடல்கள் ஹிட்டாகி விடும். வானம் பாடல்களும் அப்படித்தான்.

வானம் படத்தின் படப்பிடிப்பு முடிந்திருந்தாலும் படத்தின் க்ளைமாக்ஸில் சிம்புவுக்கு திருப்தி இல்லையாம். இயக்குநர்கள் விடயத்தில் சிம்பு எப்பவுமே மூக்கை நுழைப்பார் என்பது வழக்கமான பஞ்சாயத்து. வானம், "வேதம்" என்ற தெலுங்கு படத்தின் ரீமேக்தான் என்பதால் தெலுங்கில் இருந்த க்ளைமாக்ஸை அப்படியே தமிழிலும் வைத்திருக்கிறார் இயக்குநர் க்ரிஷ். தெலுங்கு படத்தின் இயக்குநரும் இவரே.

அதில் சிம்பு, பரத் கதாபாத்திரங்கள் இறந்துவிடுவதாக இருக்கும். ஆனால் அந்த க்ளைமாக்ஸில் சிம்புவுக்கு திருப்தி இல்லை. அதனால் இயக்குனரை க்ளைமாக்ஸை மாற்ற சொல்லி அடம்பிடித்து வருகிறார் சிம்பு. இயக்குநரும் தெலுங்கில் நான் சில தவறுகள் செய்துவிட்டேன், அதே தவறை தமிழிலும் செய்யக்கூடாது என்று தெரிவித்து வருகிறார். இதனால் வானம் க்ளைமாக்ஸ் மாற்றம் பெற வாய்ப்பு இருக்கிறது.

நல்ல விடயத்தை யாரு சொன்னா என்னங்க!

'த்ரீ இடியட்ஸ்' விஜய் நீக்கம் சூர்யாவிடம் பேசிவிட்டார் ஷங்கர்

விஜய்க்கு இது என்ன நேரமோ? தமிழில் ஷங்கர் ரீமேக் செய்யும், "த்ரீ இடியட்ஸ்" படத்தில் விஜய் இல்லை! விஜய்யின் அரசியல் கூட்டணி யாரோடு? என பரபரப்பு எழும்பியிருக்கிறது.விஜய்யின் சமீபத்திய செய்திகள். ' த்ரீ இடியட்ஸ்' ரீமேக்கில் விஜய் நீக்கப்பட்டாரா? இல்லை விலகிக் கொண்டாரா ? அப்படியானால் அதற்கு என்ன காரணம், என்பதே தமிழ் சினிமாவின் இப்போதைய ஹாட் டாக்.

தன் 'காவலன்' படத்தை திரையிடுவதிலேயே பல சிக்கல்கள் நீடிக்கும் நிலையில், இனிவரும் படங்களுக்கு எதிராகவும் சதிகள் நடப்பதாக நினைக்கிறார் விஜய். ஷங்கரின் 'த்ரீ இடியட்ஸ்' படத்திற்காக இந்தியில் அமீர் கான் ஸ்டைலில் தன் தலை முடியை வெட்டியிருக்கிறார் விஜய். இப்போது அந்தப் படத்தில் இருந்து நீக்கப்பட்டதால் மற்றப் படத்தின் சூட்டிங்கையும் தொடரமுடியாமல் அவதிப்படுகிறார்.

சரி, விஜய் 'த்ரீ இடியட்ஸ்' படத்தில் இருந்து நீக்கப்பட காரணம் என்ன? விஜய் அதிமுக அணிக்கு சாதகமாக காய் நகர்த்திக் கொண்டிருக்கிறார் என்ற தகவல் முதல்வர் கருணாநிதி தரப்பை அதிரவைத்திருப்பதால், அவர் நடிக்கும் காவலன் படத்திற்கு எதிரான சில விடயங்களை செய்யவும் தனது கட்சிக்காரர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறது என்று சினிமா வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

அப்படியே டைரக்டர் ஷங்கரையும் அழைத்து கடிந்து கொண்டதாக கிசுகிசுக்கிறார்கள். இந்தப் படத்தில் விஜய் இருக்கக்கூடாது என்று அவர்கள் நிர்ப்பந்தம் செய்ததால் ஷங்கரின் வேண்டுகோளுக்கு இணங்கித்தான் விஜய் விலகிக் கொண்டார் என்றும் பேச்சிருக்கிறது.

ஆனால் விஜய் தரப்போ, த்ரீ இடியட்ஸ் படத்திற்கு கால்ஷீட் பிரச்சினைகள் இருந்தது, அதனால் தான் ஷங்கர் படத்தில் இருந்து விஜய் விலகிக் கொண்டார் என்று சொல்கிறது . இம்மாதம் 17ஆம் திகதி காவலன் ; யார் தடுத்தாலும் வெளிவரும் என்று சபதமிட்ட படத்தின் தயாரிப்பாளர் ஷக்தி சிதம்பரம் அந்த வேலைகளில் பிசியாக இருக்கிறார்.

காவலன் படத்தின் விளம்பரங்களில் சென்னையில் புக்கிங் செய்யப்பட்ட தியேட்டர்களின் லிஸ்ட்டை மட்டுமே வெளியிட்டிருக்கிறார்கள். வெளியூர் தியேட்டர்களின் பெயர்கள் எதுவுமே இல்லை.(குறிப்பாக வெளியூர் எடிஷன்களில் இல்லை). இதற்கு முன்பு திரையரங்க உரிமையாளர்கள் விஜய்யை நம்பி ஐந்து படங்களில் மோசம் போனதும் இந்த நிலைமைக்கு முக்கிய காரணம்.

அரசியலில் எந்தப் பக்கம் சாயப் போகிறார் விஜய்? விஜய்யின் அரசியல் நகர்வுகள் என்ன? என்பதே இளைய தளபதியின் நெஞ்சில் குடியிருக்கும் ரசிகர்களுக்கு காத்திருக்கும் சஸ்பென்ஸ்... இதில் இன்னொரு சூடான செய்தி " த்ரீ இடியட்ஸ்" படத்திற்காக சூர்யாவிடம் பேசிவிட்டாராம் ஷங்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

காங்கேசன்துறை -ஓமந்தை ரயில்பாதை மீள் நிர்மாணப்பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து ஓமந்தை வரையான ரயில் பாதையை மீண்டும் நிர் மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. முதற்கட்டமாக ரயில் பாதை அமைப்பதற்கான நில அளவைப்படம் தயாரிக்கும் பணிகள் யாழ்.மாவட்டத்தில் ஆரம் பமாகியுள்ளன. ரயில் நிலையங்கள் இருந்த இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருவது டன் இப்பகுதிகளில் குடியிருப்பவர்களும் அகற்றப்பட்டு வருகின்றனர்.

காங்கேசன்துறை- கொழும்பு ரயில் பாதை நிர்மாணப்பணிகள் இந்திய வெளியு றவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவினால் கடந்த மாதம் 27ஆம் திகதி ஆரம்பித்து வைக் கப்பட்டிருந்ததையடுத்து இவ்வேலைகள் இந்திய நிறுவனமொன்றால் முன்னெடுக்கப் பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

வடமராட்சி தென்மேற்கு பிரதேச ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை திங்கட் கிழமை பி.ப.1 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிர தேச ஒருங்கிணைப்புகுழு தலைவருமாகிய சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள் அனை வரையும் தவறாது பங்குபற்றுமாறு கரவெட் டிப் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் கேட் டுள்ளார். (சி)

மகேஸ்வரன் எம்.பி.படுகொலை வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் தி.மகேஸ்வரனின் படுகொலை வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்கின் எதிரியான ஜோன் ஸ்டன் கொலின் வெலன்டைன் சிறைக் காவலர்களினால் நீதிமன்றில் ஆஜர் படுத்தப் பட்டார். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அரச சட்டவாதியான எம்.குமாரரட்ணம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

இவர் தனிப்பட்ட காரணங்களால் நீதிமன் றில் ஆஜராக முடியவில்லை என்று அறிவிக் கப்பட்டது. இதனையடுத்தே வழக்கு விசா ரணையினை அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

நேற்று முன்தினம் விசாரணையில் சாட்சி யமளிப்பதற்கா 8 பொலிஸ் அதிகாரிகள் வந்திருந்தனர். எதிரியின் சார்பில் சட்டத் தரணி பி.கி.ரிஷாந்தனுடன் சிரேஷ்ட சட்டத் தரணி க.ஜெயக்குமார் ஆஜராகியிருந்தார்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முத லாம் திகதி கொழும்பு பொன்னம்பலவானேஸ் வரர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சமயம் மகேஸ்வரன் எம்.பி.சுட்டுக் கொல்லப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

இலங்கை மக்களுடைய வருமானம் உயர்வடைந்துள்ளது

அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

மத்தியதர வருமானமுடைய மக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள தாக இலங்கை மக்களின் வருமானம் உயர்வடைந்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சர்

பாடசாலைக்குரிய தேசிய அடையாள அட்டைகள்

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளி லிருந்து, மாவட்ட செயலகத்திற்கு கடந்த 30 ஆம் திகதி வரை கையளிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்க ளுக்குரிய தேசிய அடையாள அட்டைகள் யாழ். அரச அதிபரினால் கொழும்பிலிருந்து மாவட் டச் செயலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றை பாடச .லை அதிபர்கள் மாவட் டச் செயலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளு மாறு யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல் டா சுகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். மத்தியதர வருமானமுடைய மக்களின் எண்ணிக் கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மோட் டார் கார் விற்பனையிலும் ஏற்பட்ட உயர்வின் மூலம் இதனை விளங்கிக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். 7ஆயிரம் பேர் மாருதி கார்களைக் கொள்வனவு செய்வதற் காக விண்ணப்பித்துள்ளதாக தெரிவித் துள்ள அவர் சலவை இயந்திரங்கள் உள் ளிட்ட நவீன வீட்டு மின்சார உபகரணங்க ளின் விற்பனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள தாக குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு -கிழக்கு விவசாய உற்பத்திகள் அதிகரித்துள்ளதாகவும் உள்நாட்டு வர்த்தகர் களுக்குகூடுதல்ஊக்குவிப்புஅளிக்கப்பட வேண் டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-4)

அரசியல் பழிவாங்கல்களை அரசாங்கம் நிறுத்த வேண்டும்

தினேஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் உரிமைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தினேஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்

தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளை யும் பாதுகாக்க வேண்டுமென சிவில் அமைப் புக்களும் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத் துள்ளன.

மக்களின் அடிப்படை உரிமைகளை உறு திப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்ததுள்ளார்.

காணாமல் போனவர்களைக் கண்டு பிடிப் பதற்கு அரசாங்கம்நடவடிக்கை எடுக்க வில்லை என குறிப்பிட்டுள்ள அவர் சரத்பொன் சேகாவை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி யுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டுமென வும் தவறான முறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சகலரையும் அரசாங்கம் உடனடி யாக விடுதலை செய்ய வேண்டு மெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

லங்கா சோல்ற் நிறுவனத்தில் பணியாற்றிய 71 பணியாளர்களுக்கு உதவுதொகை வழங்கல்

லங்கா சோல்ற் நிறுவனத்தில் பணியாற் றிய 71பணியாளர்களுக்கான பணிக்கொடை, நிலுவைச் சம்பளம், இழப்பீட்டுத் தொகை என் பன எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் வீர சிங்கம் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட வுள்ளது.

எனவே, கீழ் பெயர் குறிப்பிடப்படும் பணி யாளர்கள் குறித்த தினத்தன்று காலை 10 மணியளவில் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தில் அமர்ந்துகொள்ளுமாறு உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

காசோலையைப் பெற்றுக்கொள்ளவுள்ள பணியாளர்களின் விபரம் வருமாறு,

வரதலட்சுமி வோல்ரஸ், புண்ணியமூர்த்தி சிறீகாந்தன், சின்னமுத்து சண்முகவதன், கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை, முருகுப் பிள்ளை குலசிங்கம், யோசப் திரவியஹகம், முருகன் கந்தசாமி, சித்தன் கந்தசாமி, கார்த் திகேசு விஸ்னேஸ்வரன், பாமகாமி பக்மகாந் தன்,

வீரசிங்கம் ராஜஜேந்திரம், கனசபை குண சிங்கம், கதிர்காமம் மதிபாலசிங்கம், சண்முகம் துரைராஜா, மூத்ததம்பி நவரட்ணம், அந்தோ ணிப்பிள்ளை தேவசகாயம், சின்னர் தணிகா சலம், செல்லத்தம்பி செல்வகுமார், கருதன் தவ நாதசெல்வம், வேலுப்பிள்ளை தங்கராஜா, சின்னவன் லக்குணம், எல்.எவ். கீல், சுந்தரம் வல்லிபுரம்.

முருகன் வைரமுத்து, பொன்னுச்சாமி தங் கவடிவேல், கணபதிப்பிள்ளை ஞானலிங்கம், சிவக்கொழுத்து சிவராஜா, சந்தனம் ராமன், கொலின் கனகராஜ்ா, சுந்தரம் புலேந்திரன், நடராஜா மகேந்திரம்.

நடராஜா தெய் வேந்திரம், சரவணாநந்தம் கஜேந்திரராஜா, மயில் வாகனம் சந்திரசேகரம், கணபதிப்பிள்ளை மகாதேவா, கந்தையா விநாயகமூர்த்தி, ஆறு பிள்ளைகனக சிங் கம்.

கனகசபை தங்கேஸ்வரன், இராசையா நவரத்னம், முருகுகானம் கணபதிப்பிள்ளை ஆறுமுகம் கந்தசாமி, சின்னையா கந்தசாமி, குழந்தையன் சிவப்பிரகாசம், தம்பிராஜா துரை சாமி, சின்னவன் சின்னத்தம்பி, கருதன் செல் வராஜா, தர்மலிங்கம் பத்மநாதன், முத்தையா சிவம்.

சிவசம்பு சிவகுமார், செல்லத்தம்பி சந்திர குமார், கிட்டிணன் சந்திரசேகரம், இராசையா நடராஜ்ா, கார்த்திகேசு தியாகராஜா, பொன் னையா இராசரத்தினம், வேலுப்பிள்ளை குமாரசாமி, கோவிந்தபிள்ளை முத்துலிங் கம், அருணாசலம் இராமபிள்ளை, சின் னையா தியாகராஜா.

கந்தையா குணபலாசிங்கம், கந்தையா மனோகரன், வைரமுத்து சின்னையா, வல் லிபுரம் பத்மநாதன், கஸ்பர் சந்திரன், சுப் பையா சிறிகந்தராஜா, பீ.செல்வநாயகம், செல்லத்துரை வீரபத்திரன், சீனிராஜா சுந் தரராஜா, இராசையா பரராஜசிங்கம், இளய தம்பி செல்வராஜா, கனகசபை மயில்வாக னம், கே. செல்வராஜா.

(ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானும் அமெரிக்காவும் பசுபிக்கடல் பகுதியில் இணைந்து கூட்டாக கடற்படை போர் ஒத்திகையினை நிகழ்த்தின. இதில் அமெரிக்க போர்க்கப் பல்கள் அணிவகுத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

6 நாட்களில் 15 மாடிக்கட்டடத்தை கட்டி முடித்து அசத்திய சீனர்கள்



இரண்டு அறை, வரவேற்பறை, சமையலறை, மலசலகூடம் ஆகியவற்றுடன் சேர்த்து சாதாரணமாக ஒரு வீடு கட்டுவதற்கே நமக்கு கிட்டத்தட்ட ஏழு எட்டு மாதங்கள் ஆகி விடுகிறது. 15 மாடி ஹோட்டலை ஆறே நாளில் கட்டி முடித்து அசத்தியிருக்கின்றனர் சீன கட்டட தொழிலாளர்கள். சீனாவின் ஹீனான் மாகாணம் சாங்ஷா நகரில்தான் இந்த சாதனை நாட்டப்பட்டுள்ளது.

இங்கு அர்க் என்ற பெயரில் 15 மாடி ஹோட்டல் கட்ட முடிவு செய்யப்பட்டது. கட்டடத்தை ஒரே வாரத்தில் முடித்துத் தருவதாக ஒப்புக் கொண்டது பிராட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி என்ற கட்டு மான நிறுவனம்.

அதிரடியாக வேலைகள் தொடங்கப்பட்டன. நூற்றுக் கணக்கான ஊழிய ர்கள் களமிறங்கினர். இரவு பகலாக நடந் தது வேலை.

ஐந்து நாட்கள் 16 மணி நேரம் அதாவது மொத்தம் 136 மணி நேரத்தில் அனைத்து வேலை களை யும் முடித்து விட்டு விடுதி உரிமை யாளரின் கையில் திறப்பை கொடுத்து விட்டார் கட்டுமான அதிபர்.

இந்த இமாலய சாதனை பற்றி கட்டுமா நிறுவன அதிகாரிகள் தெரிவிக்கையில், இப்படித்தான் கட்டடம் கட்ட வேண்டும் என்று சரியா படம் வைத் திருந்தால் கட்டடம் கட்டுவதற்கு தாமதம் ஆகாது. எத்தனை தொழிலாளர்கள் தேவை, என்னென்ன பொருட்கள் தேவை என்பதையும் துல்லியமாக திட்ட மிட்டால் தாமதத்துக்கு வழியே இல்லை.

மேலும் ஏற்கனவே கட்டி தயா ராக வைத்திருக்கும் கட்டடங்களை மாதிரியாகப் பயன்படுத்தி இக்கட்டடம் பெரும்பாலும் கட்டப்பட்டிருக்கிறது. வீடு கட்டும் செலவில் கூலிதான் அதிகமாகும். விறுவிறுவென அபார வேகத்தில் முடிவதால் கூலி குறை யும், வீடுகட்டும் செலவு கணிசமாக குறையும்.

சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். தொழிலாழர்கள் அனைவரும் பரபரப்புடன்தான் வேலை பார்த்தார்களே தவிர பதற்றத்துடன் அல்ல. சிறிய விபத்துக் கூட இல்லாமல் பணி முடிந்திருக்கிறது.

விரைவில் முடிந்த தால் எனோ தானோ எனக் கட்டியதாக நினைக்காதீர்கள். வெளிச்சத்தம் உள்ளே கேட்காத வகையில் கட்ட டம் உள்ளது.

இக்கட்டடம் தீ பிடித்தா லும் பாதிக்கப்படாது. தரைக்கு மேலே கட்டடம் கட்டுவதைத்தான் விரைவு படுத்தமுடியும். அத்திவாரம் போடுவதில் இந்த வேகத்தைக் காட் டுது ஆபத்து.

அதனால் ஒரு மாதம் பொறுமையாக, ஆனால் மிகவும் வலிமையாக அத்திவாரம் போட்டி ருக்கிறோம். 9 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டாலும் கட்டடத்தில் சின்னக் கீறல் கூட விழாது. இவ் வாறு கன்ஸ்ரக்ஷன் அதிகாரிகள் கூறினர். சிறப்பாக திட்டமிட்டால் ஒருவாரத்தில் 30, 40 மாடிகூட கட்ட முடியும் என்றும் நம்பிக்கையுடன் சொல்கின்றனர். (ஸ்ரீ-4)

ஜூலியன் அசேஞ்ச் அதிபுத்திசாலி; வளர்ப்புத் தந்தை பெருமிதம்

(கான்பரா)

வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் அனுப்பிய இரகசியத் தகவல்களைத் திரட்டி விக்கிலீக்ஸ் இணையத் தளத்தில் வெளியிட்டு அதன் நிறுவுனர் ஜூலியன் அசேஞ்ச் பரபரப்பை ஏற்படுத்தினார்.

அமெரிக்காவின் கோபத்துக்கு ஆளானதால் விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு தடை விதிக்கப்பட்டது. சுவீடன் பெண்கள் இருவர் கூறிய பாலியல் பலாத்கார குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இப்போது லண்டன் சிறையில் உள்ளார்.

ஜூலியன் அசேஞ்சுக்கு அவுஸ்திரேலியா உள்பட பல தரப்பில் இருந்தும் ஆதரவு குவிந்து வருகிறது. இவரது முயற்சிக்கு ஒஸ்கார் விருதே வழங்கலாம் என ரஷ்யா கருத்துத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஜூலியன் அசேஞ்ச் குறித்து அவரது வளர்ப்புத் தந்தை பிரட் அசேஞ்ச் கூறியதாவது,

சிறு வயதிலேயே ஜூலியன் அதிபுத்திசாலியாக விளங்கினான். தான் செய்வது சரி என்பதில் உறுதியாக இருப்பான். மற்றவர்களுக்கு எதிராக பள்ளி நண்பர்கள் அணி சேர்ந்தால் ரொம்ப கோபப்படுவான். அதே நேரத்தில் நகைச்சுவை உணர்வு அவனிடம் அதிகம் இருந்தது.

சிறுவனாக இருந்தபோது மரத்தில் இருந்து ஒரு முறை ஜூலியன் கீழே விழந்தான். அப்போது கை முறிந்தது. ஆனால் அவன் அழவில்லை. தனது வலியை, உணர்வுகளை வெளிக்காட்ட அவன் விரும்பவில்லை. அதனால் அவன் இப்போது செய்துள்ள காரியம் என்னை ஆச்சரியப்படுத்தவில்லை. இவ்வாறு பிரட் அசேஞ்ச் கூறினார். (ஸ்ரீ-2)

வித்தியாசமான விழாவில் சீன அறிஞருக்கு நோபல் பரிசு



சிறையிலுள்ள சீன அதிருப்தியாளர் லியூ ஜியாபோவுக்கு இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை வழங்கும் வைபவம் ஒஸ்லோவில் இடம்பெற்றுள்ளது.

அமைதிக்கும் மனித உரிமைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை யாராலும் மறுக்க முடியாது என்று இந்த வைபத்தில் உரையாற்றிய நோபல் பரிசு தேர்வுக்குழுவின் தொர்ப்யான் யாக்லண்ட் கூறியுள்ளார்.

தன்னுடைய சிவில் உரிமைகளைப் பயன்படுத்தி சீனாவில் ஜனநாயகம் மலர வேண்டும் என்று கோரியவர்தான் ஜியாபோ. ஆகவே அவரை சீனா விடுதலை செய்ய வேண்டும் என்று யாக் லண்ட் கூறியபோது அரங்கத்தில் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பினர்.

சிறையில் இருக்கும் லியூ ஜியா போ சார்பாக யாரும் கலந்து கொள்ளாததால் ஒரு காலி நாற்காலி விழா மேடையில் போடப்பட்டிருந் தது.

தேச விரோத குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு ஜியாபோவுக்கு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விருதை அவர் சார்பில் வாங்குவதற்காக நாட்டை விட்டு வெளியே வர அவரது மனைவியும் உறவினர்களும் தடுக்கப்பட்டுள்ளனர். சென்ற வருடம் அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரான அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் லியூ விடுதலை செய்யப்பட வேண்டுமெனக் குரலெழுப்பியுள்ளார்.

இந்த நோபல் பரிசு வழங்கப்படும் வைபவத்தை நேரடி ஒளிபரப்பு செய்த சர்வதேச ஊடகங்களின் ஒளிபரப்புகளை சீனா இருட்டடிப்பு செய்தது.

சீன தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் இந்த நிகழ்ச்சியைப் பற்றிய செய்திகளை வெளியிடவில்லை. பல செய்தி இணையத்தளங்களும் முடக்கப்பட்டன. இதற்கிடையே ஒஸ்லோ மற்றும் காலி நாற்காலி ஆகிய வார்த்தைகளுக்கான சீன மொழி வடிவங்களும் சீனாவின் முக்கிய சமூக வலையமைப்பான ரென்ரென் இணையத்தளத்தில் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

இளவரசர் சார்ள்ஸின் கார் தாக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணை

லண்டனில் இளவரசர் சார்ள்ஸ் சென்ற வாகனம மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கிய சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இங்கிலாந்தில் பல்கலைக்கழக படிப்பிற்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணத்தை உயர்த்துவதாக எடுத்த முடிவுக்கு எதிராக வியாழனன்று லண்டனில் மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்களில் வன்முறை வெடித்தது.

அப்போது ஓர் இடத்தில் பட்டத்துக்குரிய பிரிட்டிஸ் இளவரசர் சார்ள்ஸும் அவரது மனைவி கமீலா பார்கரும் சென்ற கார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இளவரசரும் இளவரசியும் இத்தாக்குதலில் காயமின்றி தப்பித்து விட்டனர். லண்டனில் நடந்த பெரும் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும் பணியில் கிட்டத்தட்ட மூவாயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இருந்தும் அரச கட்டடங்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டங்களில் ஐம்பது பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

இது தவிர ஆர்ப்பாட்டத்தின் போது ராஜ குடும்பத்தினர் சென்ற வாகனம் தாக்குதலுக்குள்ளான நிலையில் வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிஸார் கையாண்ட உத்திகள் போதுமானதா? அவர்கள் கட்டுப்பாட்டை இழந்துவிட்டார்களா? என்றெல்லாம் வாதங்கள் எழுந்துள்ளன.

லண்டன் வீதிகளில் நடந்த இந்த வன்முறையை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வன்மையாகக் கண்டித்தார்.

அமைதிகரமாக எதிர்ப்பு தெரிவிப்பதற்கு உரிமை உள்ளது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் வன்முறை செய்வதற்காக வீதிகளில் கூடுவதற்கும் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதற்கும் யாரு க்கு உரிமை கிடையாது. வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது சட்டம் முழு வலிமையுடன் பாய்வதை தாங்கள் உறுதி செய்வோம் என்று அவர் சூளுரைத்துள்ளார்.

கல்லூரிக் கட்டடங்களை வருடத்துக்கு மூவாயிரம் பவுண்டுகளிலிருந்து ஒன்பதாயிரம் பவுண்டுகள் வரை உயர்த்துவது என்ற அரசா ங்கத்தின் திட்டம் சிறியதோர் வாக்கு வித்தியாசத்தில் நாடாளுமன்றத்தில் வியாழனன்று நிறைவேறியுள்ளது. (ஸ்ரீ-2)



ஹெயிட்டி ஜனாதிபதித் தேர்தலில் பெரும் வன்முறை வெடித்ததால் அங்கு அரசியல் குழப்பம் ஏற்பட்டது. ஐ.நா. சார்பில் அனுப்பப்பட்ட அமைதிப்படையினர் அங்கு முகாமிட்டு நாடு முழுவதும் ரோந்து சுற்றி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. அமைப்பு உதவி

கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஐக்கிய நாடுகள்அமைப்புஉதவிகளைவழங்கிவருகிறது.

இதன்படி வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகள் காரணமாக பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு யுனிசெப் நிதியம் நிவாரணப் பொருட்களை விநியோகித்து வருகிறது. இதன்படி தூய்மையான அணிகலன் பொதிகள், நீரை சுத்திகரிக்கும் வில்லைகள், டெங்கு போன்ற தொற்று நோய்களில் இருந்து விடுபடுவதற்கான பொருட்களும் இதில் உள்ளடங்குகின்றன.

நாடளாவிய ரீதியில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை அசாதாரண கால நிலையினால் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களுள் 95 ஆயிரம் பேர் வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தகவல்களை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ளது. வடபிராந்தியத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக பல வீதிகள் நீரில் மூழ்கியிருந்ததுடன் சேதமடைந்திருந்தன. அவற்றை சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதாபிமான இணைப்புக் காரியாலயம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறையில் கடந்த திங்கட் கிழமை இரவு இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித் துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவதினம் இரவு 10 மணியளவில் வீட்டினுள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த வயோதிபத் தம்பதியினரை வாளால் வெட்டி காயப்படுத்திவிட்டு அவர்கள் இருவரையும் பணிப்பெண் ஒருவரையும் அறையொன்றில் வைத்து பூட்டிவிட்டு வீட்டை சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்.

பின்னர் குறித்த சந்தேக நபர்கள் மூவருக்கும் மயக்க மருந்தை தெளித்து விட்டு சென்றுள்ளனர்.

மறுநாள் சம்பவ இடத்திற்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிசார் மயக்கத்தில் இருந்த மூவரையும் மீட்டதுடன் தம்பதியினரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவ் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை பார்த்த பெண் இச் சம்பவத்திற்கு உடந்தையாக இருந்துள்ளார் என்று பொலிஸ் விசார ணைகளில் இருந்து தெரிய வந்தது.

மேலும் பணிப்பெண்ணிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது பணிப்பெண்ணின் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்துள்ளது. அதில் தம்பதியினர் இறந்து விட்டனரா என்று தொலைபேசியில் எதிர்த்தரப்பில் இருந்து கேள்விகள் வினவப்பட்டது.

இதை அறிந்த பொலிசார் பணிப்பெண் மீது தமது விசாரணையை முடக்கிவிட்டனர். பணிப்பெண்ணுக்கு இச்சம்பவத்துடன் தொடர்பு இருப்பதாகவும் இத்தகவலில் இருந்து வெளி வந்தது. பெண் கொடுத்த தகவல் அடிப்படையில் மேலும் இருவரை பொலிசார் கைது செய்து நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் மூவரையும் ஆஜர்படுத்தினர்.

விசாரணையை மேற்கொண்ட நீதவான் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (ஸ்ரீ-3-24)

வழுக்கையாற்றுப்பாலம் சேதமடைந்துள்ளமையால் வலி.மேற்குப் பகுதிக்கான போக்குவரத்து தடை

(யாழ்ப்பாணம்)

நவாலி- சங்கரத்தை ஊடான பாதையில் உள்ள வழுக்கையாற்றுப்பாலம் நேற்றுப் பகல் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. இதனால் வலிகாமம் மேற்குப் பகுதிக்கான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சந்தியில் உள்ள ஐந்து கண்மதகு திருத்த வேலைக்காக உடைக்கப்பட்டிருந்த போதும் அவை துரித கதியில் புனரமைப்புச் செய்யாமை காரணமாக மாற்றுப் பாதையாக இருந்த நவாலி-சங்கரத்தை வீதியும் தடைப்பட்டுள்ளமையானது காரைநகர் பகுதிக்கான போக்கு வரத்தினை கேள்விக்குறிக்கு உள்ளாக்கியுள்ளது.

பாலம் உடைந்ததைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மண்மூட்டைகளை அடுக்கி தற்காலிக வீதி ஒன்றை அமைத்து மக்களுக்கான நடைபாதையாகவும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் செல்லக்கூடியவாறும் அமைத்துள்ளன.

எனவே இச் சண்டிலிப்பாய்ச் சந்தியில் உள்ள ஐந்து கண் மதகினை துரிதமாக புனரமைப்புச் செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-4-26)

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கு இடமளியோம்

பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதம் மீண்டும் இலங்கையில் தலை தூக்குவதற்குஅனுமதியளிக்க மாட்டோம் என பாதுகாப்புச்செயலாளர் கோத்த பாயராஜபக்ஷ தெரிவித்தார்.

மாதுறு ஓயா யுத்தப் பயிற்சிப்பாடசாலையிலிருந்து பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறிய இராணுவத்தினர் மத்தியில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதற்காக பாதுகாப்புப் படையினர் முன்னெச்சரிக்கையாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த யுத்தப் பாடசாலையிலிருந்து 11 அதிகாரிகளும் 443 இராணுவத்தினரும் பயிற்சிகளை முடித்துக்கொண்டு நேற்று வெளியேறினர்.

கடந்த 25 வருடங்களில் அதிக கூடிய எண்ணிக்கையான இராணுவத்தினர் பயிற்சி பெற்று வெளியாகியது இதுவே முதற் தடவையாகும். (ஸ்ரீ-2)

ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கு விசேட வரிச்சலுகை

இலங்கையில் இருந்து ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கு விசேட வரிச்சலுகைகளை வழங்குவதற்கு ஈரான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையை ஈரானில் மீண்டும் பொதியிடும் நடவடிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு முதலீடாக இடம்பெறவுள்ளது. இந்த நடவடிக்கையின் கீழ் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு விசேட கோட்டா அனுமதி முறையை அறிமுகம் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான புரிந்துணர்வு உடன் படிக்கையை இலங்கை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையுடனான வர்த்தக நடவடிக்கைகளில் ஈரான் 6ஆவது இடத்தை வகிக்கின்றது. இரு நாடுகளுக்கிடையில் 992 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (ஸ்ரீ-2)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவல்லாத பொருட்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் பெய்த பருவ கால மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்ததால் இடம்பெயர்ந்த மக்களிற்கு வழங்குவதற்கு போதியளவு உணவல்லாத பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில், கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்களின் அவசர தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை கிளி. அரச அதிபர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அரச சார்பற்ற நிறுவனங்களால் போதியளவு உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவை வெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்களிற்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

அண்மைய வெள்ள அனர்த்தத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 628 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து564 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-30)

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனம் இன்று

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனம் இன்று ஞாயிற்றுக்கிழமை கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெறவுள்ளது. இதன்போது, கட்சியின் புதிய யாப்புக்கு அங்கீகாரம் பெறப்படும் என்று ஐ.தே.க.வின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்த விசேட சம்மேளனத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் தலா 55 பிரதிநிதிகள் வீதமும் கலந்து கொண்டு திருத்தியமைக்கப்பட்டுள்ள புதிய யாப்புக்கு அங்கீகாரமளிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மிகுந்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இந்தவிசேட சம்மேளனம் இன்று நடைபெறுகின்றது. கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்வார்கள்.

இதன்போது புதிய யாப்புக்கு அங்கீகாரம் பெறப்படும். அந்த வகையில் எதிர்காலத்தில் புதிய யாப்பின் ஊடாக அசராங்கம் ஒன்றை அமைக்கும் வகையில் நாங்கள் செயற்படுவோம் என்றார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உபயோகிக்கக் கூடாது. அதுபோலத்தான் பண்படாத அறிவும். – ஹோம்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

தமிழ் அரசியல் பலத்தை ஏற்படுத்த இளைஞர் அவை அவசியம்

ஈழத் தமிழ் மக்களின் தற்கால அரசியல் நிலைமை ஆரோக்கியமானதாக இல்லை. நீண்ட கால ஆயுதப் போராட்டம் தமிழ் மக்களின் அரசியல் அறிவிற்கு தடைவிதித்து விட்டது. அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் அரசியல் பற்றி எதுவுமே தெரியாதவர்களாக இருக்கின்றனர்.

ஓர் இனத்தைப் பலவீனமாக்குவதற்கு அந்த இனம் அறிவியலில் பின்தங்கியிருப்பது மிகவும் அவசியம். எனவே குறித்த இனத்தின் அறிவியலை மழுங்கடிப்பதற்கான விடயங்களை திட்டமிட்டு அரங்கேற்றும்போது குறித்த இனம் அரசியல் நிலையில் பாரிய பின்னடைவை அனுபவித்துக் கொள்ளும்.

இந்த அவல நிலையை இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

மிகப் பெரியதொரு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் குழாம் ஆயுதப் போராட்டம் சார்ந்த அறிவியலோடு இயங்கிய நிலையில் தாக்குதல் சம்பவங்கள், அதில் ஏற்பட்ட இழப்புகள், தாக்குதலை நடத்தியவர்கள் பற்றிய விபரம் தொடர்பிலானவையே யுத்தகால அரசியல் அறிவாக இருந்தது.

ஆனால் யுத்தத்தின் பின் அந்த நிலைமை மாறிப்போக, தற்போது அரசியல் அமைப்புகள், சட்டவாக்கங்கள், தமிழர்களின் பூர்வீக வரலாறுகள், தமிழ்த் தலைவர்கள் மற்றும் சமயப் பெரியார்களின் பணிகள் என்பன பற்றி எதுவுமே தெரியாத – தெளிவில்லாத இளைஞர் சமூகத்தையே தமிழினம் கொண்டுள்ளது.

சமயமும் ஆத்மீகமும் ஒழுக்கமான சமூகத்தை உருவாக்குவது போல, அரசியல் அறிவு இனப் பற்றையும், மொழிப் பற்றையும் எனது மண் என்ற விசுவாசத்தையும் ஏற்படுத்தும்.

சம காலத்து இளைஞர்கள் எல்லை மீறிச் செல்வதற்கும் அவர்களின் செயற்பாடுகள் விரும்பத்தகாதவையாக இருப்பதற்கும் அடிப்படைக் காரணம் அவர்களிடம் அரசியல்சார் அறிவு பூச்சியமாக இருப்பதேயாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை அறியாத இளைஞர்களால், சேர் பொன் இராமநாதனைப் பற்றி எதுவுமே தெரியாத இளவல்களால், சுவாமி ஞானப் பிரகாசர், தனிநாயகம் அடிகளார், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றவர்களை தெரிந்து கொள்ள விரும்பாத இளைஞர்களிடம் இனப் பற்றையோ, மொழிப்பற்றையோ இம்மியும் எதிர்பார்க்க முடியாது.

தந்தை செல்வநாயகம் நடத்திய அகிம்சைப் போராட்டத்தை – அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை இளைஞர்கள் ஆத்மார்த்தமாக உணர்ந்து கொள்ளாதவரை அவர்களிடம் தமிழ்ப்பற்று ஏற்படமாட்டாது.

எனவே எமது இளைஞர்களுக்கு அரசியல் அறிவை ஊட்டுவதற்கான திட்டங்களை தமிழ் அரசியல் தலைமைகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தமிழ் இளைஞர்கள் அரசியல் புலத்தில் அறிவைப் பெறுகின்ற போது, தமிழ் இனம் எதிர்காலத்தில் ஆரோக்கியமான –நேர்மையான அரசியல் தலைமையை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாகும்.

நாம் இருக்கும்வரை அரசியலை நடத்தி விட்டுப் போய்ச் சேர்வோம் என்று தமிழ் அரசியல்வாதிகள் நினைப்பார்களாயின் அதுவே அவர்கள் தமிழ் இனத்திற்கு இழைக்கும் பெரும் கொடுஞ் செயலாகும்.

இரண்டு பரம்பரைகளின் அழிவை சந்தித்த வன்னி மக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை அவசியம்

சிறிதரன் எம்.பி. வலியுறுத்து

வன்னி மக்கள் இரண்டு பரம்பரைகளின் அழிவைச் சந்தித்தவர்கள். எனவே அவர்கள் தொடர்பில் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வலியுறுத்துகின்றார்.

நேற்றுமுன்தினம் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இரண்டு பரம்பரைகளின் அழிவிற்குப் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள வன்னி மக்களை மழையும் வெள்ளமும் மிக மோசமாகப் பாதித்துள்ளன. இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் பொறுப்பு வாய்ந்தவர்கள் மனிதநேயத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக மழை பெய்து வருகின்றது. இந்நிலையில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக நான் அறிகிறேன். இதுவரை சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள்வரை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கான உதவிகள் எவையும் பூரணமாக வழங்கப்படவில்லை. அபிவிருத்தி பற்றிப் பேசினார்கள். அதற்காக விளம்பரம் செய்தார்கள்.

அந்த அபிவிருத்தியின் பலாபலன்களைத்தான் இன்றைக்கு வன்னி மக்கள் அனுபவிக்கின்றார்கள். இருக்க வீடில்லை. பொது இடத்தில் ஒதுங்குவோமென்றால் அதற்கும் கூரை கிடையாத நிலைமைதான் இன்றளவும் அபிவிருத்தி எனப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னரும் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட்டன. ஆனால் அப்போதெல்லாம் எதையும் எதிர்கொள்ளும் மனோநிலையும் சூழலும் இருந்தது. அவை இன்றைக்கில்லை.

மிக மோசமான யுத்தம் காரணமாக எல்லாமே தொலைக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு தொலைப்பதற்கு யார் காரணமானவர்களோ அவர்கள் மீளவும் அதனைப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். இன்றுவரை அப்படியெதுவும் நடந்ததாக நான் அறியவில்லை.

அதைக் கேட்டால் வன்னி மக்களுக்கு 3500 கோடி ரூபாய் வங்கிக் கணக்கில் இருப்பதாகக் கூறுகிறார்கள். இவர்களை நம்பித்தான் எங்கள் சீவியம் உருப்படும் என இன்னும் சிலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்தம் முடிபடைந்து ஒன்றரை வருடங்களுக்கும் மேலாகின்றது. மக்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த இடங்களில் குடியேறி விட்டார்கள். ஆனால் ஒழுங்காகத் தகரங்கள் கூட இன்னமும் வழங்கப்படாத நிலைதான் வன்னியின் உண்மை நிலை என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான பல குடும்பங்கள் உணவிற்கே கஷ்டப்படும் உண்மையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நிலையில் மக்களுடைய நலனில் பொறுப்பு வாய்ந்தவர்களும் தொண்டு நிறுவனங்களும் மனித நேயத்தோடு நடந்து கொள்ள வேண்டும்.

அது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தார்மீக கடமையாகும். இவ்விடயம் குறித்து பாராளுமன்றிலும் பேசியிருக்கிறேன். மக்களுடைய நலனில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றேன் என்றும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

சீனாவின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் அமெரிக்கா

விக்கிலீக்ஸ் இணையம் தகவல்

(லண்டன்)

சீனா ஆபிரிக்காவில் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வருவதை அமெரிக்கா மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்ட புதிய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. விக்கிலீக்ஸ் இணையத்தினால் புதிதாக வெளியிடப்பட்ட இரகசிய இராஜதந்திர கேபிள்களிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

நைஜீரியத் தலைநகர் லாகோஸிலுள்ள சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர், சீனாவை ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட நாசகார நாடாக வர்ணித்துள்ள போதிலும், இராணுவ பாதுகாப்பு மற்றும் புலனாய்வு விவகாரங்களில் அமெரிக்கா சீனாவை அச்சுறுத்தலாகக் கருதவில்லை எனவும் இந்த அதிகாரி கூறியுள்ளார்.

லாகோஸிலுள்ள எண்ணெய் கம்பனி பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது ஆபிரிக்க விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் ஜோன்னி கார்சொன் தெரிவித்திருந்த கருத்துக்களே இக்கேபிளில் வெளியாகியுள்ளன.

இக்கேபிளில் எந்தவொரு தார்மீக சிந்தனையுமின்றி ஆக்கிரமிப்பு சிந்தனையுடைய நாசகார பொருளாதார போட்டியாளராக சீனாவை வர்ணித்துள்ள ஜோன்னி, சீனா மற்றையவர்களின் நலன்களுக்காக ஆபிரிக்காவில் கால் பதிக்கவில்லை எனவும் அது தனது முக்கிய தேவைகளுக்காகவே அங்கு வேரூன்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆபிரிக்காவில் சீனாவின் பிரசன்னத்திற்கான இரண்டாவது காரணம், ஆபிரிக்க நாடுகளின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கானது எனவும் அவர் கூறியுள்ளார்.

சீனாவை இராணுவ ரீதியான அச்சுறுத்தலாக அமெரிக்கா கருதவில்லை எனத் தெரிவித்துள்ள ஜோன்னி, ஆபிரிக்காவுடன் இராணுவ ரீதியான இணக்கப்பாடுகளை சீனா ஏற்படுத்தும் பட்சத்திலேயே இது குறித்து அமெரிக்கா கவலையடைய ஆரம்பிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மற்றொரு கேபிளில் கென்ய அரசாங்கத்திற்கு சீனா இராணுவ புலனாய்வு ஒத்துழைப்புகளை வழங்குவது குறித்த அமெரிக்க அதிகாரிகளின் கலந்துரையாடல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 2இலட்சத்து 51 ஆயிரம் இரகசிய இராஜதந்திர கேபிள்களில் இதுவரை 1100 கேபிள்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் முழு கேபிள்களும் வெளியாக சில மாதங்கள் எடுக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தமாவோம்



"நீங்களும் பொறுமையோடிருங்கள். உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள். ஏனெனில் ஆண்டவரின் வருகை நெருங்கி வந்துவிட்டது"

ஆண்டவரின் வருகைக்காக காத்திருக்கும் நாம் சோதனைகள், துன்பங்கள் வந்தாலும் மன உறுதியோடு ஆண்டவரின் வருகையை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

தூயவருடைய வருகையை நாம் பாவக் கறைகளைக் களைந்து தூய உள்ளத்தோடு எதிர்கொள்ள வேண்டும்.

பரமபிதா காட்டிய பாதை

எனவே வெளி ஆடம்பரங்களால் மட்டுமன்றி உளரீதியாக நாம் ஆயத்தமாக வேண்டும்.

உள்ளத்தை தூய்மைப்படுத்துவதே உண்மையான செயற்பாடாகும். நாம் ஒவ்வொருவரும் இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து ஆன்மீகப் பாதையில் பயணிக்க வேண்டும்.

இதுவே ஆண்டவரின் வருகைக்கு எம்மை நாம் தயார்படுத்துவதாகும். உள்ளங்களை உறுதிப்படுத்தியவர்களாக இறைபாதையில் பயணிப்போம். ஆண்டவரின் வருகையை எதிர்கொண்டு இறை ஆசீர் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பொருளாதார ஒத்துழைப்பு



பிரஸல்ஸ் ஐரோப்பிய யூனியனுக்கும், இந்தியாவுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த இருதரப்பும் திறந்த, தாராள மய சந்தைக்கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்திய ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் பங்கேற்ற அவர் இந்த யோசனையைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 27நாடுகளும் உள் நாட்டு வர்த்தகத்தை காக்கும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பொருளாதார, ராஜ்ஜிய ரீதியிலான உறவில் இருதரப்பும் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்தியாவின் உட்கட்டமைப்பு, உயர்தொழில்நுட்பம், ஆராய்ச்சி, சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத எரிசக்தி ஆகிய துறையில் ஐரோப்பிய யூனியன் முதலீடு செய்ய அதிக வாய்ப்புக்கள் உள்ளன. மனித வள மேம்பாடு, தொழிற்பயிற்சி, சிறிய - நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது ஆகியவற்றில் ஐரோப்பிய யூனியனின் அனுபவத்தை அறிந்து பயனடைய இந்தியா ஆர்வமாக உள்ளது.

இருதரப்பு வர்த்தக - முதலீடு ஒப்பந்தத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தால் இந்திய விவசாயிகள், வர்த்தகர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களின் நலன் முழுமையாக பாதுகாக்கப்படும். ஒப்பந்தம் மூலம் இருதரப்பும் அதிக பயனடையும். நடப்பாண்டில் மட்டும் ஐரோப்பிய யூனியனுடனான வர்த்தகம் 3ஆயிரத்து 342 கோடியை எட்டியுள்ளது. பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் இந்தியர்கள் பயணம் மேற்கொள்வதற்கு விசா விதிமுறைகளில் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கி தடையற்ற போக்குவரத்தை உருவாக்கவேண்டும்.

காப்புரிமை விவகாரம் தொடர்பாக இந்திய மருந்து நிறுவனங்களின் தயாரிப்புக்களுக்கு சில நாடுகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடை நீக்கப்படவேண்டும். அண்மைக்காலமாக இந்தியாவுக்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான உறவு முதிர்ச்சி அடைந்து வருகிறது.

மாநாட்டில் நடைபெற்ற பேச்சின்போது அரசியல், பாதுகாப்பு, கல்வி, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து பணியாற்றுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

அணுசக்தி, கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறினார். (ஸ்ரீ)

செல்போனில் அதிக நேரம் பேசினால் காதுகளின் திரை, நரம்புகளுக்கு பாதிப்பு

(திண்டுக்கல்)

செல்போனில் அதிக நேரம் பேசினால், காதுகளின் திரைகளுக்கும், நரம்புகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என ஒலி மாசு கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

திண்டுக்கல்லில் ஒலி மாசு குறித்த கருத்தரங்கம், மாவட்ட ஊனமுற்றோர் துறையின் சார்பில் நடந்தது. சென்னை ராமச்சந்திரா பல்கலைக்கழக பேச்சு, மொழி மற்றும் கேட்பியல் துறை விரிவுரையாளர் விஜயகுமார் உரைநிகழ்த்துகையில்,

அதிகமான ஒலி மாசால் இதயம், மூளை, சிறுநீரகம் பாதிக்கப்படும். அதிக சத்தம் கேட்பவர்கள் சவ்வு கிழிந்து, காதுகளில் இரத்தப்போக்கும் ஏற்படும். ஒரு மனிதருக்கு 40 முதல் 50 டிசிபல் சத்தத்தை கேட்கலாம். இதற்குமேல் கேட்கும்போது உடல் மற்றும் உளரீதியாக பாதிப்பு ஏற்படுகிறது. விமானங்கள் பறக்கும்போது 120 டிசிபல் சத்தமும், லொறிகள் செல்லும் போது 80 முதல் 90 டிசிபல் சத்தமும் ஏற்படுகிறது.

செல்போன்களில் அதிகநேரம் பேசுபவர்களின் ஒலித்திரையும் பழுதுபட்டு, அந்த அதிர்வுகளினால் நரம்புகளுக்கும் பாதிப்பு ஏற்படும்.உலகத்தில் அதிகளவு ஒலி மாசுபடும் நகரங்களில், 3ஆவது இடத்தில் மும்பை உள்ளது. ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு டிசிபல் சத்தம் உலக சுகாதார நிறுவனம் கணக்கிட்டுள்ளது.

மெட்ரோ பாலிடன் நகரங்களான டில்லி, சென்னை, கொல்கத்தா, பெங்களூரில் 90 டிசிபல் சத்தம் இருக்கலாம். மதுரையில் 55 டிசிபலும் திண்டுக்கல்லில் 35முதல் 40 டிசிபல் தான் சத்தம் இருக்கவேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

இரகசிய தகவல்கள் கசிவதை தடுக்க அமெரிக்கா சட்டம்

எதிர்காலத்தில் விக்கிலீக்ஸ் இணையதளம் அமெரிக்க அரசு பற்றிய இரகசியங்களை வெளியிடுவதைத் தடுக்க வகை செய்யும் மசோதா நேற்றுமுன்தினம் அமெரிக்க பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் சமீபத்தில் அமெரிக்க வெளியுறவு தொடர்பான இரண்டரை இலட்சம் இரகசிய ஆவணங்களை வெளியிட்டது. இதனால் கிலி அடைந்த அமெரிக்கா, எதிர்காலத்தில் அதுபோன்ற இரகசிய ஆவண வெளியீடு நிகழாமல் இருக்க சட்ட பூர்வமாக வழி ஏற்படுத்த முனைந்துள்ளது.

விக்கிலீக்ஸ் இணையதளம் அதன் நிறுவனர் ஜூலியன் அசேஞ்ச் மற்றும் இவர்களைப் போன்று இரகசிய ஆவணங்களை வெளியிடுவோரை கைதுசெய்து விசாரிக்கும் அதிகாரமளிக்கும் மனித உளவு பாதுகாப்பு மற்றும் சட்டபூர்வ தகவல் பரப்பு அமுலாக்கம் என்ற மசோதா கடந்த வாரம் அமெரிக்க பாராளுமன்றின் செனட் சபையில் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து கடந்த வியாழக்கிழமை பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்யப்பட்டது. சபைக் கமிட்டியின் உறுப்பினரான கிங் என்பவர் இம்மசோதாவை தாக்கல் செய்து பேசும்போது இந்த தகவல்கள் அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மட்டுமல்ல அமெரிக்க உளவுத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலகம் முழுவதும் பணியாற்றும் கணக்கற்றோரின் உயிர்களுக்கும் ஆபத்து விளைவிப்பவை. அசேஞ்ச் இனி அமெரிக்காவின் எதிரி. இவர் சதிச் செயல் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும். விக்கிலீக்ஸ் இரகசிய ஆவணங்களை வெளியிடும் இணையத்தளமும் அல்ல அசேஞ்ச் பத்திரிகையாளரும் அல்ல என்று காட்டத்துடன் தெரிவித்தார். (ஸ்ரீ)

112 வயதிலும் ஓய்வின்றி உழைக்கும் 'இளைஞர்'

(சிதம்பரம்)

யாருடைய தயவுமில்லாமல் ஓய்வின்றி உழைத்துவரும் 112 வயது 'இளைஞர்' ஒருவர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். கடலூர் மாவட்டம், சிதம்பரம் மணலூர் கெங்கையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் மாணிக்கம்(112). இவருக்கு மூன்று மகள்கள். அனைவருக்கும் திருமணம் செய்து கொடுத்து விட்டு மனைவியுடன் வசித்து வந்தார்.

எட்டு ஆண்டுகளுக்கு முன் மனைவி இறைந்துவிட்டார். ஆனால் தனது மகள்கள் வீட்டில் தங்காமல் தள்ளாத வயதிலும், யார்தயவுமின்றி தனியாக வசித்து வருகிறார். அதுமட்டுமன்றி அடுத்த வேளை சாப்பாட்டிற்கு அடுத்தவர்களை எதிர்பார்க்காமல் ஆடுகள் மேய்த்தும், தனக்கு தெரிந்த கயிறு திரிக்கும் தொழிலைக் கொண்டு அதில் கிடைக்கும் வருமானத்தில் காலத்தை ஓட்டி வருகிறார். ஆடு மேய்த்த நேரம் போக, கிழிந்த நைலோன் சாக்குகளைக் கொண்டு கயிறு செய்து விற்பனை செய்து அப்பகுதி மக்களின் கவனத்தை வெகுவாக கவர்ந்துள்ளார்.



என்னால் முடியாதது ஒன்றும் இல்லை என வெறுமனே வாயால் கயிறு திரித்து உழைக்க விரும்பாமல் அடுத்தவர்களை நம்பியே காலத்தை ஓட்டும் இந்தக்கால இளைஞர்கள் மத்தியில், தள்ளாத வயதிலும், யாருடைய தயவையும் எதிர்பாராமல் உழைத்து சாப்பிடும் இந்த 112 வயது " இளைஞரை" நினைத்தால் பெருமைப்படாமல் இருக்க முடியாது. (ஸ்ரீ-4)

கலைஞரே ! தயவு செய்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்

சீமான் பேச்சு

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தேசிய பாதுகர்பு சட்டம் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்து நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான அவர் சிறைக்கு வெளியே அமைக்கப்பட்ட மேடையில் உரையாற்றினார்.

அவர் உரையாற்றுகையில்,

தமிழகத்திலேயே ஜெயலலிதாவும், கலைஞரும் ஒரே ஒரு விவகாரத்தில் மட்டுமே ஒற்றுமையாக உள்ளார்கள். அந்த ஒற்றுமை கொள்ளை அடிப்பதைப் பற்றி பேசுவதில் தான். வரும் சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸை இல்லாமல் அழிப்பதே எங்கள் நோக்கம். கூட்டணியில் இருந்தாலும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஞானசேகரன் போன்றவர்கள் எங்கே நின்றாலும் தோற்கடிப்போம்.

நானோ, திருமாவளவனோ தமிழர்களுக்காக தனித்து ஒரு கட்சியை உருவாக்கினோம்.

உங்களைப் போல அடுத்தவன் முதுகில் சவாரி செய்யவில்லை. இதோ வருகிறது

தேர்தல். உங்கள் உலக தலைவனை ராகுல்காந்தியை அழைத்து வாருங்கள். போட்டிபோடட்டும்.

மண்ணை கவ்வ வைத்து துரத்துவோம். கலைஞர் குடும்பமே காங்கிரஸை தூக்கி சுமக்காதே. பீகாரிலேயே 4 இடங்களில் மட்டுமே ஜெயிக்க முடிந்தது.

தமிழகத்தில் அந்த இடம் கூடக்கிடைக்காது. கலைஞரே! உங்கள் குடும்பம் ஆண்டது போதும். உங்களது குடும்பம் தமிழகத்திற்காக எவ்வளவு காலம்தான் உழைத்துக் கொண்டிருப்பது. தயவு செய்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். புதியதாக நாங்கள் வந்து ஆளுகிறோம் என்று தனது உரையில் கூறினார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களுக்கு உடனடித்தீர்வு தற்போதைக்கு தேவையற்றது!

பேரா.கீத பொன்கலன் வலம்புரிக்கு விசேட செவ்வி

தமிழ் மக்கள் தற்போதுள்ள நிலையில் அவர்களுக்கு உடனடி அரசியல் தீர்வு தேவையற்றது. அவர்கள் தோல்வியடைந்த மனோபாவத்தில் உள்ளதால் சில நேரங்களில் குறைந்தளவான தீர்வினையும் ஏற்றுக்கொண்டு விடுவார்கள் என கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியல் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.ஜ.கீத பொன்கலன் தெரிவித்தார்.

அவர் வலம்புரிக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார். அவரது செவ்வி இங்கு பிரசுரமாகிறது,

கேள்வி:- தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்:- தற்போதுள்ள சூழ்நிலையைப் பொறுத்தவரையில் உடனடியாக அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்வது சாத்தியமான தல்ல. அது விரும்பத்தக்கதுமல்ல. ஏனெனில் தமிழ் மக்கள் தோல்வியடைந்த மனோபாவத்தில் உள்ளதால் சில நேரங்களில் அவர்கள் குறைந்த தீர்வினையும் ஏற்றுக்கொண்டு விடக்கூடும். ஆகவே அதுபற்றி இப்போதைக்கு சிந்திக்கவேண்டிய தேவையில்லை.

தற்போதுள்ள நிலைமாறும் காலத்தில் எமது வளங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதில் கவனம் செலுத்துவதோடு உடனடிப்பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். புனருத்தாரணம், குடும்பங்களை ஒன்றுசேர்த்தல், காணாமல் போனோரை தேடிக்கண்டுபிடித்தல், விதவைகளுக்கு உதவி அளித்தல் போன்ற பிரச்சினைகள் அதிகமாகவுள்ளன.

அதில் கவனம் செலுத்தும் சமநேரத்தில் அரசியல் ரீதியாக எங்களது உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவோமாகயிருந்தால், தற்போதுள்ள இக்கட்டான நிலை மாறுகின்றபோது எமக்கான அரசியல் தீர்வுபற்றி பேசக்கூடியதாக இருக்கும். எனவே தற்போதுள்ள நிலையில் அரசியல் தீர்வு பற்றி பெரிதாக தமிழ் மக்கள் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

கட்சிகள் ஒன்றிணைவதால் எந்தப் பலனும் ஏற்படாது

கேள்வி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்க்கட்சிகளின் அரங்கமும் இணைவது எந்தளவுக்கு நன்மைகளை ஏற்படுத்தும்?

பதில்:- இது குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இராமநாதன் நினைவுப் பேருரையில் நான் சுட்டிக்காட்டியிருந்தேன். எங்களின் கடந்தகால அரசியலின் பலவீனம் என்னவென்றால் ஒரே கட்சி, ஒரு குடும்பம், ஒரு தலைவன் என்ற நிலையில் இருப்பதே. இதனால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

தெற்கைப் பொறுத்தவரையில் அவர்கள் எங்களை விட புத்திசாலிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் இரண்டு கட்சிகளை வைத்திருப்பார்கள். ஒன்று இல்லாவிட்டால் மற்றையதோடு இணைந்திருப்பர். இதனால் ஒரு கட்சிக்குப் பயந்து மற்றைய கட்சி மக்களுக்கு சேவைசெய்ய முன்வரும். ஒரு கட்சியில் விருப்பம் இல்லாவிட்டால் மற்றைய கட்சிக்கு மக்கள் வாக்களிப்பார்கள். என்றொரு நிலையே தெற்கில் காணப்பட்டது.

ஆனால் தமிழ் மக்களுக்கு அவ்வாறில்லை. எங்களுக்கு எப்போதும் ஒரு கட்சிதான், ஒரு தலைவன் தான். எனவே இப்போதைய நிலையில் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து ஒருநிலைப்பாட்டிற்கு வருவதென்பது சாத்தியமில்லை.

அத்துடன் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து நிறுவனம் ஒன்றினை தோற்றுவிப்பது சாத்தியமானதுமல்ல. தமிழ்க்கலாசாரம், தமிழ் அரசியல், தமிழ் மனோபாவம் எனப் பார்க்கின்ற போது அது சாத்தியமாகாது.

எனவே சாத்தியமில்லாத விடயம் குறித்துப் பேசுவதில் எந்தப்பயனுமில்லை. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இப்போதுள்ள கட்சிகளை எவ்விதம் சேர்த்துச் செயற்படுகிறார்களோ அவ்விதம் அங்கிருந்து செயற்படுத்தட்டும்.

ஆனால் தமிழ் மக்களுக்கு நல்லதென்று கருதக்கூடிய பொதுவான நிலைப்பாடு ஒன்றிற்கு அவர்களை கொண்டுவர வேண்டும்.

அதன் மூலம் அவர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றபோது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பதில்பக்கத்திலிருந்து ஒரு உந்துதல் ஏற்படும். தமிழ் மக்களின் போராட்டம் தோல்வியடைவதற்கு இந்த மத்திய மயப்படுத்தப் படாமையே காரணமாகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த கொழும்பு பல்கலைக்கழக அரசியல் துறைப் பேராசிரியர் எஸ்.ஜ.கீத பொன்கலன் அவர்களின் செவ்வி இங்கு பிரசுரமாகின்றது. பேராசிரியர் கீத பொன்கலன் நீண்ட காலமாக அரசியல் ஆய்வாளராக செயற்படுவதுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டு இலங்கையின் அரசியல் தொடர்பாக விளக்கமளித்துள்ளார். இவர் பல அரசியல்சார் நூல்களையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்க்கட்சிகளின் அரங்கம்- கூட்டமைப்பு இணைவதால் பலன் எதுவும் ஏற்படாது

எனவே எல்லாக் கட்சிகளையும் ஒன்றிணைப்பது என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. தமிழ் அரங்கு அரசாங்கத்திற்குச் சார்பானது. அது அவ்விதமே செயற்படட்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுதந்திரமான அரசியல் கொள்கையுடைய அமைப்பு. எனவே அது வெளியிலிருந்துகொண்டு சுதந்திரமாக தனது அரசியலை மேற்கொள்ளட்டும். இந்தச் செயற்பாடு பயனுடையதாக இருக்குமென நான் நினைக்கிறேன்.

கேள்வி:- நல்லிணக்க ஆணைக்குழுவிடம் பெருமளவான பொதுமக்கள் சாட்சியமளித்துள்ளனர். அத்துடன் தாங்களும் இக்குழு முன்னிலையில் சாட்சியளித்துள்ளீர்கள். இந்நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மையளிக்குமா?

பதில்:- நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளித்தவர்கள் உணர்வு பூர்வமாக தங்களின் கஷ்டங்களை தெரிவித்தனர். இந்நிலையில் அவர்களின் எதிர் காலம் தொடர்பில் கதைப்பது முக்கியமானது. இதனைக் கருத்திற்கொண்டு நானும் ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளித்தேன்.

இதன்போது எவ்விதம் எதிர்காலத்தில் நியாயமான ஒரு முறையை நோக்கி செல்வதென்பது தொடர்பாக எனது கவனம் காணப்பட்டது. அதில் பல விடயங்கள் சுட்டிக்காட்டியிருந்தேன். குறிப்பாக உண்மையான இன நல்லிணக்கம் இலங்கையில் அடையப்பட வேண்டுமாகயிருந்தால் எந்த்விதமான செயற் பாடுகள் இடம்பெற வேண்டும் என சுட்டிக் காட்டியிருந்தேன்.

அதில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப்பிரச்சினைகள் சிலவற்றிற்கு தீர்வுகாண்பது. குறிப்பாக பிரிந்திருக்கின்ற குடும்பங்களை எவ்விதம் ஒன்றுசேர்ப்பது. அதற்காக விசேடமான நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற யோசனை ஒன்றை முன் வைத்திருந்தேன்.

அந்த நிறுவனம் நல்லிணக்க ஆணைக் குழுவிடம் இணைந்து தகவல்களை திரட்டுதல் மற்றும் காணாமல் போனோர் உள்ள குடும்பங்களுடன் தொடர்புகொள்ளல், அவர்களுக்கு தகவல்களை வழங்குதல், அவர்களுக்கு உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் விரைவாக குடும்பங்களை ஒன்றுசேர்க்கவேண்டும் என்றும் அந்த யோசனையில் கூறியிருந்தேன்.

அதேபோல் வடக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தைக் குறைக்கவேண்டும் எனவும் கூறியிருந்தேன்.

13-வது திருத்தம் தேவையில்லை

அத்துடன் உண்மையானதும் நிலையானதுமான இன நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாகயிருந்தால் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியம். அதன் அடிப்படையில் 13-வது திருத்தச்சட்டம் பயனுடையது அல்ல என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

13-வது திருத்தச்சட்டம் தோல்வியடைந்துள்ளது. அது பிரச்சினைக்கு உதவப்போவதில்லை. எனவே அதற்கு அப்பால் சென்று புதியதொரு முறைமை பற்றி சிந்திக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினேன்.

கேள்வி:- அரசியல் தீர்வு குறித்து அரசாங்கம் பேச வேண்டுமாயின் எந்தக் கட்சியுடன் பேசவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்:- அரசியல் தீர்வு என்று ஒன்று வரும்போது பிரதானமான பங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம்தான் பேசவேண்டும்.

கேள்வி:- தமிழ்க்கட்சிகள் ஒன்றிணையட்டும். அதன் பின்னர் நான் அரசியல் தீர்வு குறித்துப் பேசுகிறேன் என ஜனாதிபதி அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தாரே?

பதில்:- அந்தக் கருத்தில் நியாயமில்லை. இவ்வாறு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைவது என்பது சாத்தியமில்லை. அரசியல் தீர்வு என்பதும் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைவது என்பதும் இரண்டுபட்ட பிரச்சினைகள். தமிழ் கட்சிகளை இணைப்பது என்பது சாத்தியமான தல்ல.

கேள்வி:- தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து தமிழ் கட்சிகளுடன் பேசினால் மட்டுமே நல்லதொரு தீர்வு கிடைக்கும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

பதில்:- தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து பிரதானமான பங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டும். ஜனநாயக முறையிலிருந்துகொண்டு மற்றக் கட்சிகளுடன் அரசியல் தீர்வு குறித்து பேசக்கூடாது என்பது ஜனநாயக விரோத சிந்தனை.

கேள்வி:- ஏன் கூட்டமைப்புக்கு பிரதானமான பங்கு உள்ளதெனக் கூறுகிறீர்கள்?

பதில்:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் பிரதானமான கட்சி. பாராளுமன்றில் அதிகூடிய ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்க்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. அதன் காரணமாக அந்தக்கட்சியே பிரதானமான பங்கை வகிக்க வேண்டும்.

வலம்புரிக்கு விசேட செவ்வி வழங்கிய பேராசிரியர் எஸ்.ஜ.கீத பொன்கலன்

கேள்வி:- தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் இந்தியாவின் பங்குஎதுவாக இருக்கவேண்டும் என நினைக்கிறீர்கள்?

பதில்:- இந்தியாவை வைத்துக்கொண்டுதான் தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்க வேண்டும் என்றால் இந்தியாவின் திட்டத்திற்கு ஏற்றவாறே அது அமையும். எனவே இந்தியாவிடமிருந்து தீர்வு கிடைக்கும் என தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது நல்லதல்ல. அது பலவீனமான நிலைப்பாடாகவே அமையும். தமிழ் மக்களுக்கு ஆதரவாக உறுதியாக இந்தியா செயற்படுவதற்கான சாத்தியம் மிகமிகக் குறைவு.

கேள்வி:- ஆயுதரீதியான போராட்டம் இல்லாத நிலையில் அரசியல் ரீதியாக என்ன போராட்டங்களை முன்னெடுக்க முடியும்.

பதில்:- வன்முறையோ அல்லது ஆயுதரீதியான ஒரு செயற்றிட்டமோ தமிழ் மக்களுக்கு பயனளிக்கப்போவதில்லை. எனவே அதுபற்றி அவர்கள் சிந்திக்காமல் இருப்பது அவர்களுக்கு நல்லது.

யுத்தத்தின் இறுதிக்காலத்தில் நடந்த அனுபவங்களை வைத்துப் பார்க்கின்றபோது இன்னொரு ஆயுதக் கலாசாரம் இனி தோன்றாமல் இருப்பது தமிழ் மக்களுக்கே நல்லது.

செவ்வி:-
க.சதீபன்
உ.பாலமுருகன்

இந்த நிலையில் அவர்களுக்கிருக்கின்ற ஒரே ஒரு தெரிவு ஜனநாயகரீதியான அரசியல் செயற்றிட்டம் ஒன்றுதான். அந்த ஜனநாயக ரீதியான அரசியல் செயற்றிட்டமொன்று ஏற்படுவதற்கு இப்போதுள்ள சூழ்நிலை பொருத்தமானதல்ல. ஏனெனில் யுத்தம் இப்போதுதான் முடிபடைந்துள்ளது. ஆனால் ஜனநாயக அரசியல் ஒன்றைத் தவிர வேறொரு தெரிவு இல்லாததன் காரணமாக எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களின் அரசியலைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 ஆசனங்களை வைத்திருப்பது என்பது உறுதியான ஒரு அடித்தளம். ஆனால் அந்த 13 ஆசனங்களினதும் அடித்தளம் இன்றுவரை சரியாக பயன்படுத்தப்படவில்லை. எனவே அதனை எவ்விதம் உறுதியாகவும், தந்திரோபாயமாகவும் எதிர்காலத்தில்பயன்படுத்தலாம் என்பது தொடர்பான சிந்தனைகள் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

கிளிநொச்சி, தரும புரம் பிரதேசத்தில் கணனி கற்கை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
கணனி அறிவுள்ளோர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0772487778
(3228)

நாளை ஆரம்பம்

A/L -2010
DAY CLASS
கலை,வர்த்தகப் பிரிவுகள்
காலை - 8 மணி
DMI-JAFFNA
(C-1785)

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் - இணுவில்
(இரு இடத்திலும்)
A/L DAY CLASS
-கலை, வர்த்தகப் பிரிவு-
நாளை ஆரம்பம்:
13.12.2010 திங்கள் 8.00 A.M.
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
(C-1802)

பாலகுமாரை இராணுவத்...

புலிகளின் மூத்த உறுப்பினரும் அரசியல் பிரமுகருமான பாலகுமாரன் மற்றும் அவரது மகனான சூரியதீபன் மற்றும் பாலகுமாரின் வாகன ஓட்டுநர் ஜங்கரன் (புனை பெயர்) ஆகிய மூவரையும் கடந்த வருடம் மே மாதம் 17ஆம் திகதி காலை 7 மணிக்கும் 7.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் முள்ளிவாய்க்கால், இரட்டை வாய்க்கால் பகுதியில் வைத்து படைத்தரப்பின் 57வது படைப்பிரிவைச் சேர்ந்த படையினர் தனியாக அழைத்துச் சென்றதைத் தான் நேரில் கண்டதாக இச்சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டுப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் எறிகணை வீச்சில் பலத்த காயமடைந்திருந்த வேலுப்பிள்ளை பாலகுமாரன் கையில் மருந்து கட்டப்பட்டிருந்த நிலையிலேயே படைத்தரப்பினரிடம் சரணடைந்தார்.

இவரது மகன் சூரியதீபன் தனது படிப்பும் கணினியுமாகவே எந்த நேரமும் இருப்பார். இவர்கள் எங்களுடன் இருந்த காலப்பகுதியில் எவ்வித போர் நடவடிக்கைகளிலும் நேரடியாக ஈடுபட வில்லை.

இச்சம்பவங்கள் தொடர்பில் பலர் சாட்சியமாக இருக்கின்றார்கள். எமக்கும் எமது உறவுகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் பட்சத்தில் சிறிலங்கா அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட படுகொலை நடவடிக்கைகளை சான்றாதாரங்களுடன் எடுத்துக் கூறத் தயாராக இருக்கின்றோம்.

அத்துடன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த பலர் மீண்டும் கொல்லப்பட்டதை நான் நேரில் கண்டேன் என இந்த எழுத்து மூல சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ச-5)

ஸ்ரீலங்கா முஸ்லிம்...

ஆகியோரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் டி.சுமந்திரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 18ஆவது திருத்தச்சட்ட மூலத்திற்கு ஆதரவளிப்பதற்கு முன்னர் இரு கட்சிகளுக்குமிடையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

BRIGHT IN [சாவகச்சேரி]

வர்த்தகப்பிரிவு பெறுபேறு

மாணவர் பெயர்	பெறுபேறு	நிலை (RANK)
த.நிரோஜினி	3 A	9
அ.கஜாந்தினி	2 A B	15
தி.ஜெகத்	3 A	17
ஜெ.சிந்துஜா	2 A C	36
த.ஜெஜிதா	2 A C	46
ப.சிந்துஜா	2 A C	54
சி.தனுசன்	2 A C	71
ப.நிகிந்தன்	A B C	97
சி.அஜந்தினி	2 A C	132
க.கஜீபன்	2 B C	134
பு.தாரணி	2 B C	220

-நிர்வாகி
(C-1807)

கலைமகள் அழகு நிலா
Beauty Academy
நத்தார், புது வருடத்தை முன்னிட்டு குறைந்த கட்டணத்தில் உங்களது முகம், தலைமுடியை அழகுபடுத்த கலைமகள் அழகு நிலா முன்வருகின்றது. அழகுபடுத்த விரும்பும் அனைவரையும் கலைமகள் அழகு நிலா அன்புடன் வரவேற்கின்றது.
மார்கழி விடுமுறையில் விரைவான பயிற்சி
Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சி பெற ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
பயிற்சிகள்
★ Facial (8 வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stratening
★ Hair Perming
★ Hot oil Massage
★ Hair Cutting
★ Hair dry
★ Hair Colouring
★ Pedeicure Manicure
★ கறுப்புக் காய் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
★ Bleaching
★ Bridal make up (6 வகை)
தொடர்புகள்: 0773719071
பயிற்சி ஆரம்பம் : 14/12/2010
பயிற்சி நேரம் : மு.ப.10.00 மணி - பி.ப.4 மணி வரை
அனுமதிக் கட்டணம்: 3000/=
கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
(C-1800)

Bachelor of Information Technology(BIT)
External Degree
OF
University Of Moratuwa

யாழ் மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

முக்கிய திகதிகள்
விண்ணப்ப முடிவுத்திகதி: 15.12.2010
பதிவுகளுக்கான முடிவுத்திகதி: தை.2011
வகுப்பு ஆரம்பம்: மாசி.2011
தொடர்புகளுக்கு
Tel:-021 222 4142
Hot. 0773099308
ESOFT
114,Navalar Road
Jaffna

NALIN INFORMATION TECHNOLOGIES PVT LTD
2010 ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு
மிகக்குறைந்த விலையில் கணனிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள்

A (39800/-)	B (44900/-)	C (58800/-)
MOTHER BOARD - ASUS G31	MOTHER BOARD - ASUS P5G41T	MOTHER BOARD - INTEL DH55HC
PROCESSOR - 3.06 GHz DUAL CORE	PROCESSOR - 3.06 GHz DUAL CORE	PROCESSOR - CORE i3
RAM - KING DDR2 1GB 800	RAM - KING DDR3 2GB 1333	RAM - KING DDR3 2GB 1333
HARD DISK - SAMSUNG 500GB	HARD DISK - SAMSUNG 500GB	HARD DISK - SAMSUNG 500GB
DVD WRITER - SAMSUNG	DVD WRITER - SAMSUNG	DVD WRITER - SAMSUNG
MONITOR - 16" ACER LCD	MONITOR - 16" ACER LED	MONITOR - 19" SAMSUNG LED
KEY/MOUSE - MULTI LANGUAGE	KEY/MOUSE - MULTI LANGUAGE	KEY/MOUSE - MULTI LANGUAGE
CASING - POWER LOGIC	CASING - POWER LOGIC	CASING - POWER LOGIC

கணனிகள் ஒவ்வொன்றிற்கும் 3 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் B, C கணனிகளிற்கு 4GB Kingston or HP Flashdrive, Card Reder இலவசமாக வழங்கப்படும்

SAMSUNG 20" LED MONITOR - 16500/- (3Y)
SAMSUNG 19" LED MONITOR - 14800/- (3Y)
LITEON LABELTAG DVD WRITER - 3750/- (1Y)
FLASHDRIVE 4GB - 1500/- (1Y)
FLASHDRIVE Kingston 4GB - 1200/- (1Y)
HSDPA MODEM - 5200/- (1Y)

Processor i3, i5, Hard disk, Memory, LCD, LED, Web Cam என்பன மிகவும் மலிவான விலையில்
மேலதிக விபரங்களை எமது நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும்
NALIN information Technologies Pvt Ltd
195/4, PARAMESWARA JUNCTION, TP: 021 2221166, 0777667974

வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை நத்தார், புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்
ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
உங்களிற்கான அன்பளிப்புக்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்
DHL WORLDWIDE EXPRESS
TCN Express
No-28,Nelson Place, Colombo-6
திருமுருகன் கொம் நெற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
இல-46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. பிரதான வீதி, நெல்லியடி.
இல-6, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. 4, மில் றோட், வவுனியா

புதுக் கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் கார்த்திகை மாதம் 12.12.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுபவேளையில் நவீன காட்சியறையுடன் செலான் வங்கிக்கு அருகாமையில்
புதிய வினோ நகை மாடம்
திறக்கப்பட இருப்பதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர், பெரியோர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
பிரதான வீதி, சங்கானை, 0776002588
முகாமையாளர் மு.வினோதன்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org